பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர ஆணடு 2034 | மார்கழி 30 | புதன்கிழமை | (14-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 26

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அமெரிக்கத் தலையீட்டிற்கு ஆப்பு

# ஜனாதிபதியையும் பிரதமரையும் ஒற்றுமைப்படுத்த இந்தியா முயற்சி

### விசேட குழுவொன்று கொழும்பு வருகிறது

(கொழும்பு)

**இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் ஓர் இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வந்து அரசியல் ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ள இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.**

நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சரியான தருணம் ஏற்பட்டிருக்கின்ற இவ்வேளையில் அரசியல் கட்சிகளுக்கிடையே காணப்படுகின்ற அதிகார இழுபறி அதனைப் பாதிப்பதாக அமைவதால், அதற்கு முடிபுகட்டும் வகையில் இந்திய அரசு தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளையும் பொது இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந் நிலையில் அரசியல் பிணக்குக்குத் தீர்வுகாண ஜனாதிபதியையும் பிரதமரையும் பொது இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவந்து சமாதான முயற்சிகளைத் தொடர, இந்தியக் குழுவொன்று இவ்வாரம் இலங்கை வரவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஒத்துழைக்க வேண்டுமென்று அமெரிக்கா அழுத்தம் கொடுத்திருக்கும் நிலையில் ஜனாதிபதி இந்

(12ஆம் பக்கம்ப பார்க்க)

## புலிகள் கட்டுநாயக்காவை தாக்க ஐ.தே.மு. அரசு வழிவகுத்துள்ளது

### தேசிய தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாப்பை தளர்த்தியதன் மூலம் அங்கு மீண்டும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வழிவகுத்துள்ளது என்று தேசிய தேசப்பற்று இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இம் முடிபானது, விடுதலைப் புலிகளிடம் தற்போது இல்லாததொன்றான விமானப் படையை அமைப்பதற்கு இலகுவாக உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பதாக அமைகிறது.

பொருட்களின் பரிசோதனையைக் குறைத்ததன் மூலம் நாட்டில் இருந்து பெறுமதியான பொருட்களை எடுத்துச் செல்ல வசதியேற்படுத்துவதாக அமைகிறது. தற்போதைய சூழ்நிலைக்குப் பொறுப்பேற்க பிரதமர் மறுத்துவருகிறார். கண்மூடித்தனமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை நடத்துவது குறித்து சரியான தீர்மானம் இன்னுமில்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படுமா? இல்லையா? என்பதுகுறித்த தீர்மானத்தைத் தேர்தல் ஆணையாளரே எடுக்க வேண்டுமென உள்ளூராட்சி மன்ற மாகாண சபைகள் அமைச்சர் அலிக்அலுவிகார தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஒத்திவைப்புக் காலம் எதிர்வரும் 24ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்தத் தேர்தலைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்துவதா இல்லையா என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

இவ்வாறு தேர்தல் ஒத்திவைக்கப்படுமாயின் அது குறித்துத் தேர்தல் ஆணையாளர் எமக்கு அறிவிப்பார். அதன் பின்னர் அதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் நான் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்று அமைச்சர் அலிக் அலுவிகார மேலும் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிராஸ்ஹர் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுநடத்தவுள்ளார்.

அரசியல்துறை நடுவப் பணியகத்தில் முற்பகல் 11 மணிக்கு இச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேசசுக்கள் தடைப்பட்டிருக்கும் இவ்வேளையில் தூதுவரின் வன்னி விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததென்று எதிர்பார்க்கப்படுகிறது.(இ)

## வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து தமது நிலைப்பாட்டை புலிகள் விளக்குவர்

(கிளிநொச்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலைமைகள் ...

... கள் வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்குவர். விரைவில் கிளிநொச்சியில் நடை பெறவுள்ள இச் சந்திப்பிற்குரிய ஏற்பாடுகள் புலிகளின் ...

## இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை

# நால்வர் கொண்ட குழு இன்று புதுடில்லி பயணம்

(கொழும்பு)

இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அவ்விடயம் குறித்து ஆராய்வதற்காக நால்வர் கொண்ட குழுவொன்றை இன்று இந்தியாவுக்கு அனுப்பி வைக்கின்றார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஸ்ரீஹேரத், பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக கட்டளைத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல, சட்டத்தரணி நிஜித் கஜ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரே இன்று புதுடில்லி பயணமாகின்றனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

மைகள் ஆகியன குறித்து புலிகளின அரசியல் உயர் பீடம் வெளிநாட்டு தூதுவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றபின் பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே நிலவிவரும் அதிகார இழுபறி காரணமாக இனப்பிரச்சினைக்குரிய தீர்வுகள் குறித்த சமாதான முன்னெடுப்புகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இந் நிலைமை குறித்து தமது நிலைப்பாட்டினை இப்பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலி சமாதான செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம் மாதம் 19ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள தமிழீழ அபிவிருத்தித் திட்டமிடல் செயலகத்தில் நடைபெறவுள்ள இவ்வாண்டிற்குரிய திட்டமிடல் மாநாட்டிற்கும் வெளிநாட்டுத் தூதரக பிரதிநிதிகள் அழைக்கப்படவுள்ளனர். மாநாட்டினைத் தொடர்ந்து புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்.(உ-4)

# உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடங்களை மாற்ற முடியும்

## தேசிய கல்வி ஆணைக்குழு சிபார்சு

(கொழும்பு)

தேசிய கல்வி ஆணைக்குழுவின் புதிய சிபார்சுகளின்படி க.பொ.த உயர்தர மாணவர்கள் தாம் விரும்பிய ஏதேனும் மூன்று பாடங்களை தேர்ந்தெடுக்க முடியும். இப்போது விஞ்ஞானம், வர்த்தகம், கணிதம், கலை என்று மாற்ற முடியாத பிரிவுகளாக உள்ளவை கைவிடப்பட்டு மாணவர்களின் விருப்பங்களின் அடிப்படையில் அவர்கள் பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

கல்விக் கொள்கை தொடர்பான ஆலோசனைக் குழு என்ற வகையில் தேசிய கல்வி ஆணைக்குழு இந்தப் பிரேரணையை அரசின் முன்வைத்திருக்கிறது. இன்றைய சிரேஷ்ட இரண்டாந்தர கட்டமைப்பு இன்றைய தேவைகளுக்கேற்ப மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனவும் ஆணைக் குழு சிபார்சு செய்துள்ளது.

ஆயினும் பல்கலைக் கழகங்கள், மருத்துவம், பொறியியல் போன்ற சில துறைகளில் குறிப்பிட்ட பாடங்கள் தேவையென நிபந்தனை

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும்

## சுவீடன் எம்.பி. யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்குக்கிழக்கு மாகாணத்தில் சமாதான முயற்சியை மேம்படுத்தும் பணியில் சுவீடன் பெரும் பங்கினை வகித்துவருகின்றது. இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த சுவீடன் பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ்ரீனா ஹஸ்மார்க் பெகோஸன் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்; இலங்கையின் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் சுவீடன் 12 கண்காணிப்பாளர்களை வழங்கியுள்ளது.

அத்துடன் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு விடயத்தில் இலங்கையில் உள்ள சில பல்கலைக்கழகங்களுக்கு வேண்டிய சில உதவிகளையும் வழங்கிவருகின்றோம். குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வலைப் பின்னலுக்கான தொடர்புகளை விஸ்தரிப்பதில் சுவீடன் காத்திரமான பங்களிப்பை வழங்கிவருகின்றது.

வடக்கில் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆணையாளர் நியமனத்தில் தொடர்ந்தும் இழுபறி

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் கடந்த சில மாதங்களாக முடங்கிக் கிடக்கின்றன.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரின் மரணத்தைத் தொடர்ந்து இப்பதவி வெற்றிடமாக இருந்து வருவதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது பல்வேறு ஆட்சேபனைகளும் கருத்துக்களும் வெளியிடப்பட்டது இதனைத் தொடர்ந்து இப்பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களைத் தெரிவு செய்யமுடியாமல் போயுள்ளது.

அத்துடன் இந்நியமனம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணை செய்வதற்குரிய சட்ட அதிகாரங்களும் இல்லை.

அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஆணையாளருக்கான வெற்றிடத்துடன் ஆணைக்குழு செயற்பட முடிந்தாலும், இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை.

உயர் பதவிகளில் இருப்போரை பாதுகாக்கும் நோக்கிலேயே ஆணையாளரின் நியமனத்துக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சுமார் ஆயிரத்து 800க்கும் அதிகமான வழக்குகள் ஆணைக்குழுவில் விசாரணைக்காக தேங்கிக் கிடக்கின்றன. (தி-60)

# உலக சுகாதார நிறுவன பிரதிநிதிகள் கிளி. விஜயம்

(மருதங்கேணி)

உலக சுகாதார நிறுவனப் பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து சென்றுள்ளது.

வைத்தியசாலைக்கு விஜயம் செய்த உலக சுகாதார நிறுவனப் பிரதிநிதி டாக்டர் பேல், இவ்வைத்தியசாலையின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்டதுடன், வைத்தியசாலையின் இன்றைய நிலைமை அம்புலன்ஸ் வண்டியின் நிலைமை மற்றும் இதன் தேவைகள் குறைநிறைகள் ஆகியன பற்றியும் அங்குள்ள டாக்டர்களுடன் விரிவாக ஆராய்ந்தார்.

இவ் வைத்தியசாலையின் தேவைகள் குறித்து உலக சுகாதார நிறுவனத்தின் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவதாக டாக்டர் பேல் உறுதி வழங்கிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது. (உ-35)

## மாவட்டம் தோறும் விளக்கக் கூட்டம்

(திருகோணமலை)

நாட்டுப் பற்றுடைய தேசிய இயக்கம் நடத்திவரும் கூட்டத் தொடர் நேற்றுத் திருகோணமலையில் நடைபெற்றது.

மேற்படி இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களும் ஏனைய அரசியல் கட்சிகளும் கூட்டாக இணைந்து மாவட்டம் தோறும் கூட்டங்களை நடத்தி வருகின்றன.

இக் கூட்டங்களின் போது தற்போதைய அரசியல் நிலை, சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

இக் கூட்டங்களிற்கு பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (தி)

வற்வரியைக் காரணம் காட்டி

# விலை அதிகரிப்புச் செய்வோர் மீது அதிகார சபை சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

வற் வரியைக் காரணம் காட்டி பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் நிர்ணயிக்கப்படாத பொருட்களின் விலைகளைகூட சில வர்த்தகர்கள் அதிகரித்த விலையில் விற்பனை செய்கிறார்கள்.

இதற்கமைய அங்கீகரிக்கப்படாத பால் மா ஒன்றின் விலை அங்கீகரிக்கப்படாமல் 7ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மோசடி நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகார சபையின் தலைவி திருமதி சீத்தா விமலசேனா எச்சரித்துள்ளார். (தி)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட போட்டிகள் இன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் இப் போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென்அன்ரனிஸ் அணியும், மாலை 5.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென்நீக்லஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன. (ச)

## சிரமதானப் பணியில் மாணவர்கள்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வீதிகள் சிரமதான முறையில் பாடசாலை மாணவர்களால் துப்புரவாக்கப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சிரமதானப் பணியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈடுபட்டனர்.

மேற்படி ஆலயத்தில் எதிர்வரும் 1ம் திகதி இடம் பெறவுள்ள கும்பாபிஷேக நிகழ்வை ஒட்டியே இச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை எதிர்வரும் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் இந்துக் கல்லூரி மாணவர்கள் இச் சிரமதானப் பணியை தொடரவுள்ளனர். (உ-246)

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு ஒலிபெருக்கி சாதனத் தொகுதி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவரும் இராச வீதி அச்சுவேலியை சேர்ந்தவருமான அமரர் நாகமணி சீவரத்தினத்தின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் இவ் ஒலிபெருக்கிச் சாதனம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ச)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யாழ்.காங்கேசன்துறை ம.வி, யாழ். வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தி. ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 1,வகுப்பு 2-1ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்கவிரும்புவர்கள் தமது விண்ணப்பங்களை 19.01.2004ம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் கேட்டுள்ளார். (உ)

## கால்கோள் விழா

உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையில் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், சமுர்த்தி உத்தியோகத்தர் த.கோகிலாணந்தன், வலிகிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் து.கிரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச.79)

VIDEO ECONOMY MUSIC CORNER
* Audio, video, MP3 sale
* Video & Audio Cassette, CD Recording
* Video CD's & Video Cassett's Renting
297, Palaly Road
Parameswara Junction, Jaffna
Mobile :077-6072210
(C/6916) BRANCH - MARKET CHANKANAI

சங்குநாதம்
குழப்பம் தரும் மதமாற்றம்
ஆலடி மாநாடு


வியாசரின் பதில்கள்
யாழ்ப்பாணத்தில் புத்தர் சிலை... ஏன் இந்த அவசரம்!
கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள் தொடர்.
மற்றும் பல அம்சங்களுடன்...
சமாதான முயற்சியில் இருந்து பிரதமர் விலகுவாரா?
விலை ரூபா. 16/=
வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்

# இன்று ஒரு தகவல்

## யாருக்கு எதுவோ?

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். அவனுக்கு என்ன வேலை என்றால் ஓடு மாற்றும் வேலை. ஓட்டு வீடுகள் இருக்கின்றதல்லவா அங்கு ஓடுகளை மாற்றிச் சரி செய்து கொடுக்கும் தொழில். புதிதாகவும் ஓடு செய்து கொடுப்பான். ஓடு மாற்றுவதற்கு அவனுக்கு ஒரு நாள் கூலி 10 ரூபா. ஊர் ஊராகச் சென்று ஓடு மாற்றிக் கொடுத்துவிட்டு வருவான்.

ஒருநாள் ஒரு காட்டின் வழியே அடுத்த ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான் வேலைக்காக . நடுக் காட்டிலே ஒரு ஐயனார் கோவில் அதைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு குரல்! " இதோ பாரப்பா! இங்கே வா'' என்று கூப்பிட்டது. இவன் பயந்து விட்டான். இந்த நடுக்காட்டில் நம்மை யார் கூப்பிடுவது என்று.

நடையைக் கொஞ்சம் எட்டிப்போட்டான். அந்தக் குரல் மீண்டும் கூப்பிட்டது. " உன்னைத்தான் கூப்பிடுகிறேன்... இங்கே வா!'' என்றது. இந்த ஆள் உற்றுப் பார்த்தான். அந்த சாமி சிலைதான் பேசியது . "ஐயையோ... நான் ஒரு பிழையும் செய்யவில்லையே! ஏன் என்னைக் கூப்பிடுகிறாய்'' என்று நடுங்கிக்கொண்டே அருகில் சென்றான். "பயப்படாதே!உனது காலடியில் சிறிது தோண்டிப்பார் என்ன இருக்கின்றதென்று புரியும்'' என்றது.

உடனே இவன் அங்கேயே உட்கார்ந்து தோண்ட ஆரம்பித்தான். ஒரு அடிக்குக் கீழே ஒரு பானை தெரிந்தது. வெளியே எடுத்துப் பார்த்தால் உள்ளே நிறைய துவரம் பருப்பு அளவிற்குத் தங்கக் காசுகள் . இவன் அசந்து போய்விட்டான்.

இப்போது அந்த சிலை மீண்டும் பேசியது. ''இதோ பாரப்பா! அவ்வளவையும் ஒரு துணியில் கொட்டி ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு போ!'' என்றது. இவனுக்குத் தலை கால் புரியவில்லை. அவ்வளவு சந்தோஷம். மேல் துண்டை எடுத்து தரையில் விரித்தான். பானையில் இருந்தது அவ்வளவையும் கொட்டினான். கட்டப் போனான். இப்போது அந்தச் சிலை "பானையை சுத்தமாக அப்படியே காலி செய்யாதே! அதில் நான்கு காசாவது போட்டு வை!'' என்றது.

இவனும் நான்கு காசுகளை எண்ணிப்போட்டுவிட்டு இருந்த இடத்தில் பானையை வைத்து மூடினான். மூட்டையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு போய் விட்டான். அடுத்த ஊரில் ஓடு மாற்றவேண்டிய வேலை. வீட்டு உத்தரத்தில் மூடையைக்கட்டித்தூக்கி விட்டு கூரையில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஓடு மாற்ற ஆரம்பித்தான்.

அந்த வீட்டுப் பெண்மணி சமையல் செய்ய ஆரம்பித்தார். வீட்டில் துவரம்பருப்பு இல்லை. சரி கடையில் போய் வாங்கிக்கொண்டு வருவோம் என்று கிளம்பியபோது உத்தரத்தில் தொங்கிய மூட்டை கண்ணில்பட்டது "இது என்ன மூட்டை? '' என்று கேட்டார். கூரை மேல் இருந்த இவன் " அதுவா? வேறொன்றும் இல்லை. துவரம்பருப்பு வாங்கி வைத்திருக்கின்றேன்!'' என்றான் .அந்தப்பெண்மணி பார்த்தார். "சரி. அவசரத்திற்கு இதில் சிறிது எடுத்துக்கொள்வோம் பிறகு வாங்கிக்கொள்ளலாம்'' என்று நினைத்தார். மெதுவாக மூட்டையைக் கீழே எடுத்துப்பார்த்தால் முழுவதும் தங்கம்! அவ்வளவு தான் பளிச்சென்று அவரது மனதில் ஒரு யோசனை.

அவ்வளவு தங்கத்தையும் ஒரு பானையில் கொட்டி எடுத்துக்கொண்டு கடையில் வாங்கிய துவரம்பருப்பை அந்த துணி மூட்டையில் போட்டு பழையபடி உத்தரத்தில் கட்டித்தொங்க விட்டார். இவன் மாலை நேரம் வேலை முடிந்து கீழே இறங்கினான். துணி மூட்டையை கீழே இறக்கினான். என்ன இது காலையில் பாரமாக இருந்தது இப்போது இவ்வளவு லேசாக இருக்கிறதே என்று நினைத்துக்கொண்டே பிரித்துப்பார்த்தான். உள்ளே துவரம்பருப்பு.

வீட்டுக்காரப்பெண்ணிடம் கேட்டான் ''இதில் தங்கம் இருந்ததே பார்த்தீர்களா? ''என்று . அவரோ "நீ என்ன கனவு கினவு கண்டாயா? ''என்றார். இவன் தலையில் கையை வைத்துக் கொண்டே மீண்டும் அந்தச் சாமி சிலையிடம் போனான். "இப்படி என்னை ஆசை காட்டி மோசம் செய்து விட்டாயே'' என்றான் .

இப்போது அந்த சிலை மீண்டும் பேசியது.''இதோ பாரப்பா...நான் ஒன்றும் மோசம் செய்யவில்லை .இன்று அந்த தங்கம் அந்த பெண்ணுக்குக்கிடைக்கவேண்டும் என்பது விதி. அதைக்தூக்கிக்கொண்டு போவதற்கு ஆள் கிடைக்கவில்லை அது தான் உன் தலையில் ஏற்றி அனுப்பி வைத்தேன் அவ்வளவுதான் கவலைப்படாதே. உனக்குக் கிடைக்கவேண்டியது அந்தப்பானையில் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு நீ போ'' என்றது. இவன் தன்னையே நொந்து கொண் டான்."தரித்திர புத்தி எனக்கு அப்போதே நிறைய தங்கத்தை அள்ளி இதிலே போட்டிருக்கக்கூடாதா?'' என்று நினைத்தான். யாருக்கு எது கிடைக்கவேண்டுமோ அது தான் கிடைக்கும் என்பதைவிளக்க ஒரு பெரியவர் கூறிய கதை இது. இதையே வேறு விதமாகவும் நாம் அர்த்தப்படுத்தலாம். நமக்குக் கிடைக்கவேண்டியதை நாம் தான் நிர்ணயம் செய்து கொள்கிறோம். அது எல்லாம் நம்பிக்கையில் தான் உள்ளது. இப்படியும் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா?

நமது ஆள் ஒருவன் கூறினான் ''நான் கூட ஒரு பாதை வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு சூட்கேஸ் கிடைத்தது திறந்து பார்த்தேன். அது முழுதும் பணம் இருந்தது.இருந்தாலும் எனக்குக் கிடைக்க வேண்டியது கிடைத்தது'' என்றான். எவ்வளவு? என்றேன். 6 மாதம் கடும் காவல் தண்டனை என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### யாழ். பல்கலையில் இவ்வாண்டு

# வணிக முகாமைத்துவ பீட அனுமதியில் பாரிய வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்) •

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்திற்கான அனுமதியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

எமது பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்றைகள் வணிக பீடத்திற்கான அனுமதியில் வணிகத்துறையில் இம்முறை 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் வணிகத்துறைக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இம்முறை மாணவர் அனுமதியில் தமிழ் மாவட்டங்களில் பாரிய அளவு வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும்,யாழ். மாவட்டத்தில் இருந்து (55%) கோட்டா அடிப்படையிலான தெரிவில் ஆகக் குறைந்தது 23 மாணவர்கள் (93/94 கல்வியாண்டு அடிப்படை) தெரிவு செய்திருக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில் ஏறக்குறைய 6 மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எமது பல்கலைக்கழகத்தில் வணிகத் துறையானது சுமார் 150 மாணவர்களிற்கு கல்வி கற்பதற்கான வசதிகளை கொண்டிருந்தபோதிலும் 10 மாணவர்கள் மட்டும் அனுமதி பெற்றுள்ளனர் என்பது மிகவும் ஒரு நகைப்பிற்கிடமான விடயமாக அமைந்துள்ளது.

மேற்சுட்டிக்காட்டப்பட்ட 150 மாணவர்கள் என்ற துறை சார் இயலளவானது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மாணவர் அனுமதிக்கான முதற்படிவத்திலும்(**First Form**) குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே,மாணவர் நன்மை கருதியும் வணிகத் துறையின் வளப்பண்பாட்டை கருத்திற் கொண்டும் வணிகத்துறைக்கு மேலதிக மாணவர்களை அனுமதிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுஆவன செய்யுமாறும் மேலும் வணிகத் துறைக்கு போதுமான மாணவர் அனுமதிகள் வழங்கப்படும் வரை எமது பீடத்திற்கான புதிய மாணவர்களுக்கான பல்கலைக்கழகப்பதிவினை மேற்கொள்ளவேண்டாம் எனவும் துணைவேந்தரைக் கோருவதுடன்,

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் இது விடயத்தில் மேல் நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தீவக மக்களின் நன்மை கருதி திலீபன் மருத்துவமனை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப்பேரவையின் அனுசரணையுடன்,தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை புங்குடுதீவுப் பெருங்காட்டில் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரை கரும்புலி கப்டன் ரங்கனின் சகோதரன் கு.உதயன்,சிவன் தேவஸ்தானக் குருக்கள் ஸ்ரீ நா.நாகேந்திரக் குருக்கள், தேசிய எழுச்சிப் பேரவை தீவகக் கோட்ட செயலாளர் த.சத்தியதாசன்,தீவகக் கோட்ட வளம் பேணும் அமைப்பின் தலைவர் அ.அருந்தவநாயகம், ஆசிரியை மகாலட்சுமி,தீவுப்பகுதி தெற்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக தலைவர் டாக்டர் ஆ.பேரின்பநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி வண்ணன் சுடர் ஏற்றிவைக்க மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவு பொறுப்பாளர் கலைவிழி மலர்மாலை அணிவித்தார்.

தியாக தீபம் திலீபன் மருத்துவமனை பெயர்ப் பலகையினை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் மா.இளம்பிறை திரைநீக்கம் செய்து வைத்தார்.

மருத்துவமனையை வேலணை பிரதேச உதவிப் பிதேச செயலர் மு.நந்தகோபாலன் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன.கடந்த 13 வருடங்களுக்கு மேலாக புங்குடு தீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலை செயற்படாமல் இருந்து வருவதால் புங்குடுதீவுப் பிரதேச மக்கள் வைத்தியவசதி இன்றி சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.தற்போது இம் மருத்துவமனை திறந்துவைக்கப்பட்டுள்ளதால் புங்குடுதீவு மக்கள் மட்டுமன்றி நெடுந்தீவு,அனலை தீவு,எழுவைதீவு,நயினாதீவு மக்களும் இதனால் தங்களது வைத்திய வசதிகளைப்பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# இராசி பலன்

**14 .01. 2004**

**(மார்கழி 30, புதன்கிழமை)**

| | | |
|---|---|---|
| சப்தமி | முன்னிரவு | 08.27 வரை |
| அத்தம் | முன்னிரவு | 07.33 வரை |
| இராகுகாலம் | | 12.34-2.04 மணிவரை |
| சுபநேரம் | | 05.04-06.34 மணிவரை |

**மேடம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பாராட்டு, ஆரோக்கியம், மனமகிழ்ச்சி.

**இடபம்**
கௌரவக்குறைவு, மனச்சோர்வு, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
பிரயாணம், வயிற்றுக்கோளாறு, எடுத்த காரியம் தாமதமாகும், மனப்பயம்.

**கடகம்**
கூட்டு முயற்சி, போசன நன்மை, மேன்மை, உறவினர் உதவி.

**சிங்கம்**
மாதர் நட்பு, விவாதம், எடுத்தகாரியம் தாமதம், தனவிரயம்.

**கன்னி**
பெரியோர் ஆதரவு, தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும், போசன நன்மை.

**துலாம்**
மனக்கிலேசம், நண்பர்கள் சந்திப்பு, சயன சுகக்குறைவு, எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
உறவினர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, கீர்த்தி, நல்ல மனைவாசம்.

**தனுசு**
பிறருக்கு உதவுதல், தொழில் நன்மை, காரிய சித்தி, மேன்மை.

**மகரம்**
புதிய திட்டமிடல், ரோகநிலை, முயற்சி தாமதம், நிர்ப்பந்திக்கப்படல், .

**கும்பம்**
பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, வேலைப்பளு, காரியத்தடங்கல்.

**மீனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப நலம் காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# ஆங்கில மொழிமூல போதனாசிரியர்களுக்கு தாய்லாந்தில் பயிற்சி

(கொழும்பு)

தரம் 6 தொடக்கம் 11 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், சமூகக்கல்வி ஆகிய 4 பாடங்களே இவ்வாண்டு முதல் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படவுள்ளன.

ஆங்கில மொழி மூலப்பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தொடர் பயிற்சிகளை வழங்குவதற்காக மாகாணத்துக்கு ஒரு பயிற்சி நிலையம் வீதம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நிலையங்களில் கடமையாற்றுவதற்காக ஒரு மாகாணத்தில் இருந்து ஒரு பாடத்துக்கு இரண்டு பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு தாய்லாந்திற்கு கற்பித்தல் பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இந்திராணி காரியவாயன்சம் தெரிவித்துள்ளார். (தி-61)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

14

## முதலாம் பகுதி

## தேசவழமைச் சட்டம்

### யாழ்ப்பாண இராச்சியம்

மத்தியகாலப் பகுதியில் இலங்கையில் அமைந்திருந்த இராச்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பட்டினம் இலங்கையின் வடபகுதியில் உள்ள தமிழ் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது. போர்த்துக்கேய சமயகுரவரும் வரலாற்றாசிரியருமான கேறோஸ் பாதிரியார் அதனை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்.

“கணிசமான அளவுடையதான இந்த இராச்சியம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் அடங்கிவிடவில்லை. அதனருகில் உள்ள நிலங்களும், நாம் கைப்பற்றுவதற்கு முன்பு வன்னியரென்போரால் ஆளப்பட்டதன் காரணமாக வன்னி என்று சொல்லப்படும் பகுதிகளும் அதனைச் சேர்ந்தனவாகும். கடலேரி யாழ்ப்பாணப்பட்டினம் என்னும் பகுதியை ஏனையவற்றிலிருந்து பிரிக்கின்றது. பச்சிலைப்பள்ளியில் உள்ள நிலத்தொடர் மூலமாக மட்டுமே அவை தரைவழியாக இணைக்கப்படுகின்றன. வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்னும் பிரிவுகள் யாழ்ப்பாணப் பட்டினத்தில் உள்ளன. அதற்கப்பால் அமைந்துள்ள வன்னிப் பிரதேசம் மன்னார் பக்கம் முதலாகத் திருகோணமலை வரை பரந்துள்ளது. மன்னார் பிரிவின் நிர்வாக ஆதிக்கத்தில் அடங்கிய மாதோட்டத்து நிலங்களுக்குப் பெருங்களியாறு எல்லையாகும். வன்னிப் பற்று என்னும் பல பிரிவுகளைக் கொண்டுள்ள அது ஒரு பெரும் பிரதேசமாகும்”.

“இந்த நான்கு மாகாணங்களும் பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாணப் பட்டினம் என்று சொல்லப்பட்டன. வன்னியரின் ஆட்சியின் கீழ் அமைந்த வன்னி என்னும் பகுதியும் இதனைச் சேர்ந்ததாகும். புறச் சமயிகளான யாழ்ப்பாணத்து அரசர் அந்தப் பெரும் நிலப்பகுதியைக் கைப்பற்றி அங்கு தமது மேலாதிக்கத்தை நிலை நாட்டினார்கள்... அந்த நிலப் பகுதி மேற்கிலே கற்பிட்டி மாதோட்டம் ஆகியன வரையும் பரந்துள்ளது.கிழக்கிலே அது திருகோணமலைப் பகுதியை எல்லையாகக்கொண்டுள்ளது... 50 கிராமங்கள் அமைந்துள்ள தென்னமர வாடிப்பற்று,100 கிராமங்களைக் கொண்டுள்ள கரிக்கட்டு மூலப்பற்று, 90 கிராமங்களைக் கொண்டுள்ள முள்ளியவளைப் பற்று, 30 கிராமங்கள் அமைந்திருக்கும் மேல் பத்து, 70 ஊர்களைக் கொண்ட கருநாவல் பற்று முதலிய மாகாணங்கள் இந்தப் பெருநிலப்பகுதியிலுள்ளன. அவற்றுக்கப்பால் இன்னுமொரு மாவட்டத்துக்குரிய மாதோட்டம், வில்லிப் பற்று, பொன்னேரிபற்று என்ற பிரிவுகளும் உண்டு.அவற்றிலே 12 கிராமங்கள் உள்ளன. யாழ்ப்பாணப்பட்டினத்தைப் போல இவையுஞ் செட்டிக் குளத்தின் ஒரு பகுதியும் கொம்பஞ்ஞீயவின் ஆதிக்கத்தின் கீழ் அமைந்துள்ளன... ஆறு மாகாணங்களும் முந்நூறுக்குங் குறையாத கிராமங்களும் வன்னியில் உள்ளன. இதுவும் யாழ்ப்பாணப்பட்டினத்துக்குரியனவாகிய செட்டிக்குளம். பொன்னேரி,மேல்பற்று ஆகியனவும் ஒட்டுமொத்தமாக 80,000 ஜேர்மன் மைல் சுற்றளவு கொண்டனவாகும். இந்தப் பகுதியானது திருகோணமலையில் இருந்து கற்பிட்டி வரையான ஒரு நேர்கோட்டின் மூலம் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து பிரிபடுகின்றது. தீவுகள் நீங்கலாகவுள்ள முழு யாழ்ப்பாணப்பட்டினத்தின் சுற்றளவு 100,000 ஜேர்மன் சதுர மைல்களாகும். இந்த இராச்சியம் 42 வருடங்களுக்கு மேலாக சங்கிலி (சியங்கேரி)என்ற கிறிஸ்தவமல்லாத சமயம் ஒன்றைச் சேர்ந்த அரசனால் ஆளப்பட்டது. அவனொரு புராதனமானதும் இறமைகொண்டதுமான அரசவம்சத்தைச் சேர்ந்தவன். அவனுடைய வம்சாவழியினரையும் இராட்சியத்தையும் போர்த்துக்கேயர் நிர்மூலனஞ் செய்துவிட்டனர்”.

இவ்வாறு யாழ்ப்பாணப்பட்டினத்தைப் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிக்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தவரும் இலங்கையின் உலாந்தாக்கார தேசாதிபதியுமாகிய பான்கூன்ஸ் கூறியுள்ளமை கவனித்தற்குரியது. அவர் எழுதிய அறிக்கையும் 1658 ஆம் ஆண்டில் எழுதப்பெற்றது. அவரது வர்ணனையும் விபரமானது. அது ஆதாரபூர்வமான செய்திகளைக் கொண்டுள்ளது. அது யாழ்ப்பாண இராட்சியம் பற்றியும் அதன் அரசர்களைப்பற்றியும் கிடைக்கின்ற மிகவும் பழைய ஆதார பூர்வமான குறிப்புக்களில் ஒன்றாகும்.

(தொடரும்)

## அருஞ்சொல் விளக்கம் (தொடர்ச்சி)

**முன்மாரி(ம)** - முற்காலங்களிலே மட்டக்களப்பில் முன்மாரி, காலவெள்ளாமை என்னும் இருசெய்கைப் போகங்கள் இருந்தன. முன்மாரி என்பது மழையினை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படுவது. அது ஆவணி தொடக்கம் பங்குனி வரையான காலப்பகுதிக்குரியது. காலவெள்ளாமை என்பது பின்மாரி என்றும் சொல்லப்படும். காலவெள்ளாமையில் பங்குனி, சித்திரை மாதங்களிலே நெல் விதைத்து ஆவணி மாதத்தில் அறுவடை செய்வார்கள். நீர்ப்பாசன வசதி கிடைக்கும் நிலங்களில் மட்டுமே அதனைச் செய்கை பண்ணலாம். நிலத்தைச் சேறடித்துப் பரம்படித்த பின்பு நெல் விதைக்கப்படும்.

**முல்லைக்காரன்(ம)** - வேளாண்மை சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் கவனிக்கும் பொறுப்புடையவன். வயல் வேலை செய்வோரின் நடவடிக்கைகளை அவன் மேற்பார்வை செய்வான்.அவனது பொறுப்புக்களும் கடமைகளும் மரபுவழியானவை. வழமைப்படி அவற்றுக்கு அரசினரின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது.

**முல்லைவயல் (ம)** - வேளாண்மை செய்யப்படும் வயலில் முல்லைக்காரனுக்கென்று ஒதுக்கிய பங்கு. அது போடியாருக்கு விடப்படும் நிலத்தளவாகும். அது முத்தெட்டு நிலமாகும். வேளாண்மை முழுவதும் முல்லைக்காரனுக்கே உரிமையாகும். அவற்றைச் செய்கை பண்ணும் வெளியான் என்போர் கூலி பெறுவதில்லை.

(தொடரும்)

**வலம்புரியின் அனுசரணையுடன்**
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
**“தமிழா உனக்கேன் இக்கதி”**

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**
இல-15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

அலுவலகப்பாவனைக்கு

| | |
|---|---|
| | |

முழுப்பெயர்.......................
.......................
தபால் முகவரி.......................
.......................
பிறந்த திகதி.......................
தே.அ.அ. இல .......................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..............................
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்..

................ ..............................
திகதி போட்டியாளர்கையொப்பம்

**சிறு விளம்பரம்**

**English Classes**

ஆங்கில மொழிமூல பட்டதாரி ஆசிரிய தேர்விற்கான வகுப்புக்களும் **G.C.E A/L** (2006)ற்கான **General English** வகுப்புக்களும் பல்கலைக்கழக மாணவர்க்கான ஆங்கில மொழித் தேர்ச்சி வகுப்புகளும் 14.01.2004ல்ஆரம்பம.தொடர்பு கோ.சுப்பிரமணியம் இல.62, பழம் றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(8095)

## அறிவித்தலில் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

வடககு-கிழக்கு மாகாண தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் மேற்கொளவதற்கான நடவடிக்கையை கல்வி அமைச்சு ஏற்கனவே எடுத்திருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் விஜயசிறி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறவிருப்பதால் அதனை வடக்கு-கிழக்கில் நடாத்த ஆவன செய்யப்பட வேணடும் எனக் கோரி ஆனந்தசங்கரி பரீட்சை ஆணையாளருககு முன்னர் கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பதில்கடிதத்தில் விணணப்பதாரிகள் அவர்களது தெரிவுக்குரிய நகரங்களில் பரீட்சையை எழுதுவதற்கு வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு விழா

**"வேரடி மண்" என்ற தொனிப் பொருளில், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்திச் செயற்றிட்டப் பிரிவினரும் யாழ்.மாவட்டத்தின் சிற்றூர்கள் சிலவும் இணைந்து நடாத்துகின்ற பெண்கள் பங்கு பற்றும் பாரம்பரிய கலை விளையாட்டுவிழா பற்றிய ஓர் பார்வை.**

எரியுண்ட எமது ஊர்கள் மெல்ல மெல்ல மீளவுருவாகி வருகின்றன. ஊர்களின் மனிதர்கள் ஒன்றாகி ஊர்களை மீளக் கட்டியெழுப்பி வருகிறார்கள்.

நீண்டகாலம் இடம்யெர்ந்து வாழ்ந்ததால் நாம் எமது வேர்களை மறந்து விட்டோம். ஆனால, அவை எங்கள் ஆழ மனங்களில் இன்னமும் கிடககின்றன.

நாங்கள் சுயமான கலாசார பண்பாட்டை உடையவர்கள். எம்மிடம் பல நல்லவைகள் இருந்தன. அவற்றின் பலத்தில்தான் எங்கள் ஊர்கள் கட்டியெழுப்பப்பட்டுக் கிடந்தன. போர் அவற்றையெல்லாம் சிதைத்து எங்கள் மனோபலத்தை சிதறடித்து விட்டது.

அபிவிருத்தி என்று சொல்லிக் கொணடு பல செயற்பாடுகள் நடக்கின்றன. கட்டடங்களும் வீதிகளும் அமைப்பதுபற்றி சிந்திக்கின்றோம். தொலைந்துபோன, மறந்துபோன எங்கள் பாரம்பரியங்களை மீள அபிவிருத்தி செய்வதுபற்றி யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. மனிதர்களை, நல்ல ஆரோக்கியமான மனநிலையுள்ள மனிதர்களை உருவாக்குவதற்கான திட்டமிடல்களைத் தற்போதைய அபிவிருத்திச் செயற்பாடு கொண்டிருக்கவில்லை.

கட்டடங்களையும் வீதிகளையும் பயன்படுத்த நல்ல மனிதர்கள் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பது எமது வாதம்.

"ஊர்கூடி தேர் இழுப்பதுதான்" எமது வழமை. எங்கள் ஊர்கள் இப்போ இல்லாததால் வீடுகளும் கூடுவதற்கு வாய்ப்பின்றியுள்ளன.

இதனால் நாம் ஊர் கூடுவதற்கான வழிகளைக் கண்டுகொள்ள விழைகின்றோம். ஊர் ஒன்றாகக் கூடினால் நாம் அனைவரும் உயர்வோம். நாம் துடிப்போம், மகிழ்வோம், செயற்படுவோம். ஒன்றுகூடி குசலம் விசாரித்து, இணைந்து நின்று அன்பு செலுத்தி, தோள் கொடுத்து, அயலவர்கள் புடைசூழ ஆர்ப்பரித்து வாழுவோம். கடுமையாய் உழைப்பவர்கள் நாங்கள். ஆறஅமர இருக்கும் போது ஆடிப்பாடி விளையாடக் கற்றுக் கொண்டவர்கள். ஆறஅமர இருக்கும்போதுகூட வாழ்வுக்கு உரம் சேர்க்கும் உன்னதங்களை படைத்து வைத்தவர்கள். மூதாதையர் தந்த முதுசம் அனைத்தும் எதிர்கால சந்ததிக்காக ஊடுகடத்தப்படுவது வழமை. சந்ததிக் கடத்தலுக்குத் தடையாக பல துயர்கள் நடந்துவிட்டன.

எங்கள் தாத்தாவிடமும் பாட்டாவிடமும் பாட்டியிடமும் இருந்த "தேட்டம்" என்ன என்பதை அறியாதவர்களாக இருக்கின்றோம். அந்தப் "பொக்கிஷத்தைப்", "புதையலை" தேடிக்கொண்டால் எமக்குப் பலம் கிடைககும்.

வேரடி மண்ணை அறிந்துகொண்டால்தானே எம் பரம்பரை எவ்வள்வு தூரம் வேர்விட்டு நிற்கின்றது என்பதை அறியமுடியும்.

மண்ணுக்கும் மரத்திற்குமான தொடர்புதான் எமக்கும் மண்ணுக்குமான தொடர்பு. ஆழக்கிடக்கும் ஆணிவேர் பற்றி அறிந்துவிடத் துடிக்கின்றோம். எங்கள் ஆழ்மனதில் பசுமையாய்க் கிடக்கும் எங்கள் தேட்டங்களை மீளக்கொண்டு வரத் துடிக்கின்றோம்.

தாத்தாவிடம் கேடடுத் தெரிந்து கொள்வோம். பாட்டியிடமும் கேட்போம். பக்கத்துக் கிராமத்திலும் பாடப் புத்தகங்களிலும் படிச்சுக் கொள்வோம். வரலாறு தெரிந்த பண்டிதரிடம் கேட்டுக்கொள்வோம். ஊட்டமும் அறிவும் தரும் எங்கள் வேர்களைக் கண்டு மனத் திடம் கொண்டு சுயமாய் நின்றிடுவோம.

எங்களுக்கான அடையாளத்தை இனங்கண்டு பேணிக்கொள்வோம். எதிர்கால சந்ததிக்காக கையளிப்போம். இதற்காக சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள கரம்பைக் குறிச்சி, நாவற்குழி தெற்கு, நாவற்குழி கிழக்கு, கோகிலாக் கண்டி, நாவற்குழி சந்தி, கைதடி மேற்கு, கைதடிமேற்கு (ஊரியான்), கைதடி, நாவற்குழி தெற்கு போன்ற கிராமங்களிலும், உடுவில், சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுகளிலும் உள்ள தாவடி தெற்கு, ஏழாலை தெற்கு ஆகிய கிராமங்களில் ஜனவரி மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை பாரம்பரிய விளையாட்டுக்கள், கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

எமது கிராமங்களில் பல தலைமுறைகளாக விளையாடப்பட்டு வந்த 50க்கும் மேற்பட்ட விளையாட்டுக்கள் இனங்காணப்பட்டு கிராமங்களில் பகுதி பகுதியாக விளையாடபபடுகின்றன. ஒரு முழு நாள் கிராமங்களில் உள்ள மக்கள் இந்த நிகழ்வுக்காகத்தம்மை ஈடுபடுத்தத் தயாராகி வருகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைக்காமல் உள்ள சிற்றூர்களில் வாழும் பெண்கள இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். வயது முதிர்ந்த மூதாட்டி முதல் பாடசாலை மாணவிகள் வரை அனைவரையும் பங்குபற்ற ஊக்குவிப்பதில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கள உத்தியோகத்தர்கள் கடந்த ஒருமாத காலமாக ஈடுபட்டு வருகிறார்கள். பெண்கள் பங்குபற்றுதல் என்பது எமது சமூகத்தில் பெண் பற்றிக் காணப்படும் எண்ணத்தில் நிச்சயம் பல மாற்றங்களை உண்டு பண்ணும்.

**தே. தேவானந்த்**
**நிகழ்ச்சித்திட்டமுகாமையாளர்**
**ரி. ஆர். ஆர். ஓ.**

# மாகாணங்களுக்கு இடையில் 4 நாள் கிரிக்கெற் போட்டி

இலங்கை கிரிக்கெற் துறையின ஏற்பாட்டில் மாகாணங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் 4 நாள் கிரிக்கெற் போட்டிகளில் நேற்று முன்தினம் நிறைவுபெற்ற இரு வேறு போட்டிகளில் மேல்மாகாண அணியும், வடமத்திய மாகாண அணியும் வெற்றிபெற்றுள்ளன.

மேல்மாகாண அணி ஊவா மாகாண அணியுடனான போட்டியில் 7 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றி கொண்ட அதேவேளை வட மத்திய மாகாண அணி தென் மாகாண அணிச்கெதிரான போட்டியில் 79 ஓட்டங்களால் வெற்றி பெறறுள்ளது.

166ஓட்டங்களையும் ரசன் ஆல்நோட 126ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த ஊவா மாகாண அணியினர் சகல விக்கெற்றையும் இழந்து 363ஓட்டங்களைப் பெற்றுக்கொணடனர். இதில் இயன்டானியில் 125ஓட்டங்களையும், தமபிக்க சுதர்சன 110ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் தினேஸ் ஹெடடியாராச்சி 83ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார். இதன் பின்னர் தமது இரண்டாவது இன்னிங்சில் 3 விக்

தப் போட்டியின் 3வது நாள் ஆட்ட நேர முடிவின்போது 170ஓட்டங்களை விக்கெற் இழப்பின்றி தனது இரண்டாவது இன்னிங்சிற்காகப் பெற்றிருந்த தென்மாகாண அணி நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியின் 4வது நாள் ஆட்டத்தின் போது 471ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுததாடிய வடமத்திய மாகாண அணியானது அதன் முதல் இன்னிங்சில் 365ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன், இரண்டாவது இன்னிங்சில் 309ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டது. ஆனால், தென்மாகாண

# டெனிஸ் வீராங்கனையின் கணுக்காலில் உபாதை

ஹொக்மண்ட் கிண்ணத்திறகாக கடந்த வாரம் நடைபெற்ற டெனிஸ் போட்டிகளின் போது தனது கணுக்காலில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமென பெல்ஜிய வீராங்கனை கிம்கிளைஸ்டஸ் தெரிவித்துளளார். தற்போது உபாதை நங்கி ஓரளவு குணமடைந்து வருகின்ற போதும் இவரது எஞ்சிய டெனிஸ் வாழ்க்கை பாதிக்கப்படலாமெனக கருதப்படுகின்றது.

இவரின் பாதிப்புக்குள்ளான இடது கணுக்கால் ஸ்கான் பரிசோதணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பாரதூரமான தாக்கமேதும் இல்லையென

எனினும், எதிர்கால டெனிஸ் போட்டிகளில் விளையாடும் போது தான் மிக அவதானமாக கணுக்காலைப் பாதுகாக்கவேண்டிய நிலையில் இருப்பதனால் இடது கணுக்காலில் பனடேஜ் அணிந்தே விளையாடவுள்ளதாக பெண்களுக்கான டெனிஸ் உலகத் தரப்படுத்தலில இரண்டாம் நிலையில் உள்ள கிம கிளைஸ்டஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்மாதம் 19ஆம் திகதி மெல்போனில் ஆரம்பமாக வுள்ள அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டிகளில் தான் விளையாட எண்ணியிருப்பதாகவும் கிளைஸ்டஸ் மேலும்

வெற்றி கொண்ட அதேவேளை வட மத்திய மாகாண அணி தென் மாகாண அணிக்கெதிரான போட்டியில் 79 ஓட்டங்களால் வெற்றி பெறறுள்ளது.

ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற மேல்மாகாண அணிக்கும் ஊவா மாகாண அணிக்குமிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாகாண அணி அதன் முதல் இன்னிங்சில் 235 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலளித்து ஆடிய மேல் மாகாண அணி அதன் முதல் இன்னிங்சிற்காக 507ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மேல்மாகாண அணிக்காக சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடியிருந்த ரமேஷ் களுவிதாரன வீச்சில் தினேஸ் ஹெட்டியாராச்சி 83ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார். இதன் பின்னர் தமது இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெற்றை மட்டும் இழந்து வெற்றி இலக்கான 92ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட மேல் மாகாண அணி 7 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் ஊவா மாகாண அணியை வெற்றி கொண்டுள்ளது.

இதேவேளை, காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்று முடிவடைந்துள்ள 4 நாள் கிரிக்கெற் போட்டியில் வடமத்திய மாகாண அணியானது தென்மாகாண அணிக்கெதிரான போட்டியில் 79ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த யாந்து அதன் முதல் இன்னிங்சில் 365ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன், இரண்டாவது இன்னிங்சில் 309ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டது. ஆனால், தென்மாகாண அணி அதன் முதல் இனனிங்சிற்காக 184 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டிருந்தமையினால் இரண்டாவது இன்னிங்சில் வெற்றி பெற வேண்டுமாயின் 551 ஓடடங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தது. எனினும் 471 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றையும் இழந்த தென மாகாண அணி இப் போட்டியில் வடமத்திய மாகாண அணியிடம் 79 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது. (உ-68)

கருதப்படுகின்றது.

இவரின் பாதிப்புக்குள்ளான இடது கணுக்கால் ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பாரதூரமான தாக்கமேதும் இல்லையென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பமாக வுள்ள அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டிகளில் தான் விளையாட எண்ணியிருப்பதாகவும் கிளைஸ்டஸ் மேலும் தெரிவித்துள்ளார். (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

## கால்பந்தாட்ட அணிக்கு புதிய பயிற்றுநர் நியமனம்

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணி மற்றும் 23வயதிற்குட்பட்ட இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணி ஆகியவற்றின பிரதம பயிற்றுநராக சம்பத் பெரேரா நியமிக்கப்படடுள்ளார். பிரேசில் நாட்டைச் சேர்ந்த மர்கோஸ் பிறைடாவின் 4 வருட பயிற்றுநர் ஒப்பந்தகாலம் நிறைவடைந்து அவர் விரைவில் நாடு திரும்ப இருப்பதனால் சம்பத பெரேரா பயிற்றுநராக நியமிக்கப் பட்டுள்ளதாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிறிஷாந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிதாக வெளிநாட்டுப் பயிற்றுநர் ஒருவரை அழைக்கும் நோக்கம் தற்போதைக்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு இல்லையென தெரிவித்துள்ள அவர், தேசிய மற்றும் 23வயதிற குட்பட்ட அணிகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் சம்பத் பெரேராவினால் அவ் அணிகளை திறம்பட கட்டியெழுப்பும் திறமையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

சம்பத் பெரேரா இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியின் தலைவராக நீண்டகாலம் இருந்திருப்பதுடன், யோாக் மற்றும் விமானப்படை ஆகிய கழகங்களின் முன்னாள் வீரராக இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-68)

## மேற்கிந்திய அணியின் பந்துவீச்சில் திணறிப் போனது தென்னாபிரிக்கா

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெற் அணிக்கும், தென்னாபிரிக்க கிழக்குப் பிராநதிய அணிக்குமிடையில் பெனோலியில் நடைபெற்ற 4 நாள் கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 33ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இப் போட்டியின் நான்காவது நாள் ஆட்டத்தின்போது தென்னாபிரிக்க கிழக்குப் பிராந்திய அணி அதன் இரண்டாவது இன்னிங்சில் 251ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்து மேற்கிந்திய தீவுகள் அணியிடம் தோல்வியைத் தழுவியுள்ளது.

மேற்கிந்தியதீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரேக்ஸ் மற்றும் கொலிமோர் ஆகியோரின்திறமையான பந்துவீச்சே மேற்கிந்திய தீவுகள் அணியின் இந்த வெற்றிக்கு வழிவகுத்துள்ளது.

தென்னாபிரிக்க கிழக்குப் பிராநதிய அணி சார்பில் ஏ.சேமோர் 79 ஓட்டங்களையும், பி.டையானா 43ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்சிற்காகப் பெற்றுக்கொடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணிசார்பில் ரேக்ஸ் 3விக்கெற்றுக்களையும், கொலிமோர் மற்றும் ரெம்போல் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியில் முதலில துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி அதன் முதல் இன்னிங்சிற்காக 334ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சிற்காக 263 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட அதேவேளை, தென்னாபிரிக்க கிழக்குப் பிராந்திய அணி அதன் இன்னிங்சிற்காக 313ஓட்டங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# மக்களவை தேர்தல் ஏப்ரலில் பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலை எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் நடத்து வது என பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.



மக்களவையைக் கலைத்து வட்டு முன்கூட்டியே தேர்தலை எதிர் கொள்வதற்காக பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு அளித்த பரிந்துரையை ஏற்று மக் களவைத் தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்துவதென் பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடைக் கால பட்ஜட், முற்பணமானியக் கோரிக்கை முதலியவற்றை தாக் கல் செய்யும் மேலும் ஒரு தீர்மா னம் கட்சியின் செயற்குழுக் கூட் டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முறபணமானியக்கோரிக்கையை தாககல் செய்து நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றக் கூட்டத்தொடர் விரை வில் கூடும்.

பிரதமர் வாஜ்பாய் மத்திய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு தேர்தல் பற்றி அதி கார பூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, எதிர்வரும் மக் களவைத் தேர்தலில் பாரதிய ஜன தாக் கட்சி 300 தொகுதிகளைக் கைப்பற்றுவதுடன் அதன் தலை மையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒட்டு மொத்தமாக மொத் தத தொகுதிகளில் 3இல் இரண்டு பங்கு இடங்களை கைப்பற்ற வேண் டும் என்ற திட்டத்தை நிறைவேற் றும் வரை ஓய்வெடுக்காதீர்கள் என கட்சித் தொண்டர்களை பிரத மர் வாஜ்பாய் கேட்டுக்கொண்டுள் ளார்.

இதேவேளை,மக்களவைத்தேர்தலுடன் ஆந்திர மாநில சட்டமன்றத் தேர் தலையும் நடாத்துவது குறித்து ஆந் திர மாநில முதலமைச்சர் சந்திர பாபு நாயுடு பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஹைதராபாத்தில் நடை பெற்ற இந்தப்பேச்சுவார்த்தை 30 நிமிடங் கள் இடம்பெற்றுள்ளது.

மக்களவைத்தேர்தலை முற் கூட்டியே நடத்துவது நன்மையளிக் கும் என இந்த பேச்சுவார்த்தை யின்போது சந்திரபாபு நாயுடு வலி யுறுத்தியதாக தெலுங்கு தேச கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேசியஜனநாயகக் கூட்டணிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவது குறித்தும் தெலுங்கு தேசக் கட்சி யின் தலைவர் சந்திரபாபு நாயுடு நேற்று முன்தினம் அறிவித்திருந் தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி மக்களவைத்தேர்தலில் 'வெற்றி பெற்றால் வெளியில் இருந்து ஆதர வளித்து வரும் தெலுங்கு தேசக் கட்சியை தன்னுடன் இணைத்து ஆடசி அமைக்க விரும்புவதாக வாஜ் பாய் விருப்பம் தெரிவித்துள்ளார்.

(து-2)



நமது நாட்டில் நடக்கும் தீ மிதி திருவிழாவைப் போன்றது தான், ஆனால் இங்கே தீ அல்ல தண்ணீர். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 7.0 டிகிரி தட்ப வெப்பநிலையில், மிகவும் குளிர்ந்த நீரை உடம்பில் ஊற் றி பெண்கள் விளையாடுவார்கள். புத்தாண்டைத் தொடர்ந்து நடைபெறும் விழாக்களில் இதுவும ஒன்று.

## காஸ்ரோவின் ஆட்சிக்கு அமெரிக்கா முற்றுப்புள்ளி ?

கயூபா ஜனாதிபதி பிடல் காஸ் ரோவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து அமெரிக்கா கவ னம் செலுத்தி வருகிறது.

இதுதொடர்பாக மெக்ஸிக்கோ வில மேற்படி விடயம் குறித்த மாநாட்டை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கம்யூனிஸ ஆட்சி நிலவும் கியூபாவில் பிடல் காஸ்ரோவின் ஆட் சியை முடிவுக்கு கொண்டு வந்து அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. சர்வாதிகாரத்திற்கு அமெரிக்காவில் இடம் இல்லை எனவும் கியூபாவில் ஜன நாயகத்தை நிலைநாட்ட அனைவரும ஒன்று பட்டு செயற்படவேணடும் என்றும் அமெரிக்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில் ஜனாதி பதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்வேண்டு கோள் விடுத்துள்ளார்.

(து-2)

## கர்நாடகமுன்னாள் முதல்வர்காலமானார்

காநாடக முன்னாள் முதல மைச்சர் இராமகிருஸ்ணஹெக்டே காலமாகிவிட்டார். இறக்கும்போது அவரது வயது 77 கடந்த ஒரு வருட காலமாகவே நோயால் பாதிக் கப்பட்டிருந்த அவருக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு மூளையில் இரத்தக்கசிவும் மாரடைபபும் ஏற்பட்டதாக அவருடைய டாக்டர் ரமணரால் தெரிவித்தார்.

மூத்த அரசியல்வாதியான இராம கிருஸ்ணஹெக்டே இரண்டு தடவைகள் கர்நாடக முதலமைச் சராக இருந்திருக்கிறார். (து)

## குவாண்டனாமோ சிறையில் குற்றம் தெரியாத குற்றவாளிகள்

(நியூயோர்க்)

கியூபாவில் உள்ள அமெரிக்கா வின் குவாண்டனாமோ சிறையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளில் பலர் தாம் செய்த குற்றங்கள் எவை என்று அறியாதவர்களாக இருப்பதாக மனித உரிமை அமைப் பொன்று கவலை தெரிவித்துள் ளது.

அல்கெய்டா அமைப்பின் 2001 செப்ரெம்பர் தாக்குதலை அடுத்து இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பல ரைக் கைது செய்து குவாண்டனா மோ சிறையில் அமெரிக்கா சிறை வைத்துத்துள்ளது.

இங்கு சிறைவைக்கப்பட்டுளள கைதிகளின் நிலை குறிதது நியூர்யோர்க்கில் தலைமையகத் தைக் கொண்டு இயங்கும் கியூ மன் ரைட்ஸ் வோர்ஜ என்ற மனித உரிமைகள் அமைப்பு கருத்து வெளி யிடுகையில் குவாண்ட னாமோ சிறையில் உள்ள 660 கைதிகளில் பலர் தாம் செய்த குற்றம் பற்றி எதுவுமே அறியாத வர்களாக இருப்பதாகவும் அத் துடன், தம்மீது இனிமேல்தான் குற்றம் சுமத்தப்படவுள்ளதோ என்ற ஏக்க நிலையில் இருப்ப தாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இங்குள்ள சிறைக் கைதிகள் அனைவரும் பயங்கர வாதத்திற்கு எதிரான அமெரிக்கா வின் போரில் சிறைப்பிடிக்கப்பட்ட நீதிக்குப்புறம்பான விரோதிகள் என புஷநிர்வாகம் பிரகடனப்படுத்தியுள் ளமை தெரிந்ததே. (து-2)

## இந்திய-சீன எல்லைப் பிரச்சினை விரைவில் முடிவுக்குவரும் அறிகுறி?

(பெய்ஜிங்)

இந்தியாவுக்கும் சீனாவுக்கு மிடையிலான எல்லைப் பிரச்சினை குறித்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த் தைகள் சீனத்தலைநகர் பெய் ஜிங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் கடந்த 40 ஆண்டுகளாக நிலவிவரும எல்லைப் பிரச்சினைக் கான முதற்கட்ட பேச்சுவார்த்தை கள் புதுடில்லியில் நடை பெற்றிருந்த நிலையில் இரண் டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தைகளில் இந்தி யாவின் சார்பில் தேசிய பாது காப்பு ஆலோசகர் பிரதிஸ்மிஸ்ரா தலைமையிலான குழுவும் சீனா வின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தாஹிபெற்றக்கோ தலைமையிலான குழுவும் கலந்து கொண்டுள்ளன.

இந்திய சீன எல்லைப் பகுதி களில் உள்ள 44 ஆயிரம் சதுரக்கிலோ மற்றர் பரப்பளவு குறித்தே இப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

இந்தியாவின் வடக்குக் கிழக்கு மற்றும் இமாலயப் பகுதி யில் உள்ள சர்ச்சைக்குரிய மெஹ போகன் எல்லைககோடு குறித்து இப் பேச்சுவார்த்தையின் போது தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை,1962ஆம் ஆண்டு படையெடுப்பின் மூலம் இந்திய சீன எல்லைப்பகுதியில் 44ஆயிரம் சது ரக் கிலோமீற்றர் பரப்பளவை சீனா கைப் பற்றியிருந்தமை இங்கு குறிப் பிடததக்கதாகும்.

(து-2)

## உலக தரிசனம்

## ஜமாலி ஆப்கானுக்கு விஜயம்

(காபூல்)

பாகிஸ்தான் பிரதமர் ஜபருல் லாகான் ஜமாலி ஆப்கானிஸ் தானுக்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் இரு நாடுகளுக்கு மிடையிலான பாதுகாப்பு மற்றும் பொருளாதார விவகாரங்கள் குறித்து ஆப்கானிஸ்தான் ஜனாதி பதி கமீட்கர்ஸாயுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்கு மிடையிலான எல்லைப்பகுதி களில் தீவிரவாதிகளின் நட வடிக்கைகளைக் கட்டுப்படுத் துவது குறித்தும் இவர்கள் விரி வாக ஆராயவுள்ளனர்.

(து-2)

## பொடாவின் கீழ் கைதான எட்டு ம.தி.மு.க. பிரமுகர்கள் விடுதலை

### வைகோ சார்பில் பிணை மனுத் தாக்கல்

(சென்னை)

பொடாச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த ம.தி.மு.க.பிரமு கர்கள் எட்டுப்பேரையும் சென்னை உயர் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

2002ஆம் ஆண்டு மதுரையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் விடு தலைப்புலிகளுக்கு ஆதரவாக உரையாற்றியதாகக் குற்றம் சாட்டப் பட்டு பொடாச்சட்டத்தின் கீழ் இவர் கள் எட்டுப்பேரும் கைது செய்யப் பட்டிருந்தனர்.

50ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை யும் இரண்டு பேரின் பிணைப் பத்தி ரமும் தாக்கல் செய்து விட்டு இவர்கள் விடுதலைபெறலாம் என இவாகளின பிணை மனுவை நேற்று முன்தினம் விசாரணை செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

அத்துடன்,அரசியல் ரீதியாக எந்த அறிக்கையும் வெளியிடக் கூடாது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதர வாக பேசவோ எழுதுவோ கூடாது. தங்களுடைய கடவுச்சீட்டுக்களை சிறப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும். தங்களது இருப்பிடங் களை மாற்றினால் புலனாய்வு அதி காரிகளுக்கு தெரியப்படுத்த வேண டும். சிறப்பு நீதிமன்ற விசாரணை களுக்கு முழுமையாக ஒத்து ழைக்க வேண்டும் என்ற நிபந்த னைகளுடன் இவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை,ம.தி.மு.க பொதுச் செயலர் வைக்கோவின் சார்பில் நேற்று முன்தினம் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மீதான வழக்குகளை விசாரணை செய்து, எதிர்வரும் ஜுன் மாதம 30ஆம் திகதிக்கு முன் பொடா தனிநீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று மேற்படி எட்டுப்பேர்களின் பிணை அனுமதி வழக்கை விசாரித்த நீதிபதிகள் தமதுதீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார் கள். (து-2)



வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு விருந்துபசாரம் அளிக்கும் நிகழ்வொன்றை குடியரசு தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தார். இந்தநிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த கொலம்பிய விண்வெளி விபத்தில் உயிரிழந்த வீராங்கனை கல்பனா சாவ்லாவின் கணவர் ஹாரிசனுடன் கலாம் கைகுலுக்கும் காட்சி.

## தே.ஜ.கூட்டணியில் இருந்து பா.ம. கட்சி விலக முடிவு

### தி.மு.க.வுடன் இணைய தீர்மானம்

(புதுடில்லி)

தேசிய ஜனநாயகக் கூட்டணி யில் இருந்தும் மத்திய அமைச் சரவையில் இருந்தும் விலகுவது என பாட்டாளி மக்கள் கட்சி முடிவு செய்துள்ளது.

சென்னையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் அரசியல் விவ காரக்குழுவின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்ட ணியில் இருந்து விலகும் பாட்டாளி மக்கள் கட்சி தி.மு.க தலைமை யிலான மதசார்பற்ற கூட்டணி யில் இணைந்து கொள்வது எனவும் தீர்மானித்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் இருவரும் தங்களது பதவி வில கல் கடிதங்களை பிரதமர் வாஜ் பாயிடம் கையளிப்பார்கள் எனஅக கட்சித் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை,பட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் இராம தாஸ் தி.மு.க.தலைவர் மு.கருணா நிதியை நேற்று முன்தினம் சந்தித்து இரகசியப்பேச்சுக்கள் நடத்தியுள்ளார் எனவும் தெரிவிக் கப்படுகிறது. (து-2)

பொது சன நூலகம்

# செய்தித் துளிகள்

## நஞ்சூட்டி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பிரதேசசபை சாவகச்சேரி நகரசபை ஆகியன சுகாதார சேவைத் திணைக்களத்துடன் இணைந்து கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதன் பிரகாரம் இன்று புதன் கிழமை உசன் கிராமத்தில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

எனவே, அப்பகுதி மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (உ-8)

## கூட்டம்

(நவாலி)

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-102)

## கடற்படை சண்டைப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

வேலணை, அராலி வெளிப் பகுதியில் இலங்கைக் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகாலை முதல் இடம் பெறும இந்தப் பயிற்சி நடவடிக்கை அண்மைய சில தினங்களாக இடம் பெற்று வருகின்றது.

கடற்படையில் புதிதாக இணைந்தவர்களே இங்கு பயிற்றுவிக்கப் படுவதாகக் கூறப்படுகின்றது. (உ-75)

## கொழும்பில் புதையல் வேட்டை

(கொழும்பு)

இலங்கையின் வரலாற்றில் இது வரைகாலமும் கிடைக்கப் பெறாத மிகப்பெரியளவிலான புதையல் ஒன்று இன்னும் ஒரு சில நாட்களில் கொழும்பு மாநகரில் கிடைக்கவுள்ளதாக பிரபல தொல் பொருள் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் சூரியநாராயணன் அறிவித்துள்ளார்.

இலங்கை அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த வேளையில் சட்ட விரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காக விலைமதிப்பற்ற செல்வங்கள் கொழும்பிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அக்கால

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் தைப்பொங்கல் விழா நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (உ-16)

## நெற்பயிர் அழியும் அபாயம்

(காரைநகர்)

பருவமழை இன்மையால், காரைநகரில் சுமார் ஆயிரத்து 800 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர் அழிவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. (உ-246)

## முன்பள்ளியை மீள இயக்க நடவடிக்கை

(நவாலி)

9 வருடகாலத்திற்குப் பின்னர் மானிப்பாயிலுள்ள தியாகசீலம் சிறுவர் முன்பள்ளி இயங்கவுள்ளது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக, 1995 ஆம் ஆண்டு முதல் இயங்காமலிருந்த மேற்படி முன பள்ளியை மீளவும் இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-102)

## ஒன்றிப்பு வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆயர் இல்லம் மற்றும் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 1 வார காலத்திற்கு திருச்சபைகளின் ஒன்றிப்பு வாரம் அனுட்டிக்கப்படவுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் 'திருச சபை ஒருமைப்பாட்டிற்கு எதிரான தடைகளைக் கடந்து செல்வோம் எனும் பொருளிலான வழிபாடு மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன. (உ-3)

## தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தில் கல்விமாணி கற்கை நெறியை

# குறுகிய அரசியல் பேதங்களை மறந்து பிரதான கட்சிகள் செயற்பட வேண்டும்

## வேவதெனிய மெத்தானந்த தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

குறுகிய அரசியல் பேதங்களை மறந்து தேசத்தைக் கட்டியெழுப்ப நாட்டின் பிரதான அரசியல கட்சிகள் பாடுபட வேண்டுமென ராமன்ய நிக்காயாவின் மகா நாயக்கரான அதிசங்கைக்குரிய வேவதெனிய மெத்தானந்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெரகம சுமந்த தேரருக்கு ராமன்ய நிக்காயாவின் உயர் கௌரவப் பட்டம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், வறுமையை மையமாக வைத்து பௌத்தர்களை ஏனைய மதங்களுக்கு மாற்றும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இது நிறுத்தப் படவேண்டும்.

இதற்கெதிராக அனைத்துப பௌத்தாகளும் குரல்கொடுக்க முன் வராவிட்டால் பௌத்த நாடென்ற பெருமையை இலங்கை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எதிர்காலத்தில் ஏற்படும்.

இதனைத் தடுத்து நிறுத்துவது காலத்தின் கட்டாயம் எனக் குறிப்பிட்டார். (த)

# இலஞ்சம் பெற்றாராம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நாட்டை விட்டு வெளியேறத் தடை

(கொழும்பு)

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் என்.எஸ்.ஏ.செனவிரட்ண நாட்டைவிட்டு வெளியேறத்தடை விதிக்கபபட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு உயர்நீதிமன்றில் இலஞ்ச ஊழல் மோசடி குற்றத்தடுப்பு ஆணைக் குழு சமர்ப்பித்த அறிக்கையினை ஆராய்ந்த பின்னரே நீதிமன்றம் இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நீதிமன்றில் ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில்,

பொது நம்பிக்கைப் பொறுப்பாளரான என்.எஸ்.ஏ.செனவிரட்ண 19 இலட்சம் ரூபாவை ஒரு நபரிடமிருந்து இலஞ்சமாகப் பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது.

அத்துடன், பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் செனவிரட்ண இலஞ்ச ஊழல் மோசடி குற்றத் தடுப்பு ஆணைக்குழுவினால் விசாரணைக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பினை நிராகரித்துள்ளார் என்றும் எனவே, இவரை நாட்டை விட்டு வெளியேறதடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (உ-61,10)

# வற் வரியில் திருத்தும் செய்தால் பணவீக்கம் அதிகரிக்கும் பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள பெறுமதி சேர் வரியில் திருத்தங்கள் மேற்கொண்டால் நாட்டில் பணவீக்கம் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இருக்கும் என பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி முதல் கட்டமாக நிதிக் குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தனியார் பஸ் வண்டிகள் மீது இம்முறை வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட பெறுமதி சேர் வரியின் தாக்கங்களைக் குறைத்து நிவாரணங்களை வழங்க அரசு தீர்மானித் திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ.61,10)

# இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதால் எவருக்கும் இடையூறு இல்லை

## இராமேஸ்வர கடல் தொழிலாளர் சங்கத் தலைவர்

(சென்னை)

இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதால் கடல் தொழிலாளர்களுக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்படாது. கடல் தொழிலாளர்கள் என்ற போர்வையில் இருந்து அரசியல் நாடகமாடுபவர்களுக்கே அது பெரும் பிரச்சினையாகவுள்ளது என இராமேஸ்வர கடல் தொழிலாளர் சங்கத் தலைவர் கு.தேவதாஸ் தெரிவித்துள் ளாா.

இலங்கையின் கடல் வளப் பிராந்திய எல்லைக்குள் அத்துமீறி

இச்சந்திப்பின் போது இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்கள் அனுமதிக்கப் படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக,சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்த போதே தேவதாஸ் மேற்படி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த 20 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட தற்பொழுது இலங்கையின் கடற்பிராந்திய எல்லைக்குள் அதிக வளம் காணப்படுகின்றது.

இதனால் இந்திய மீனவர்கள் அங்கு சென்று தொழில் செய்வது இலங்கை மீனவர்களுக்கு எந்த வித இடையூறையும் விளைவிக்காது.

கடந்த 20 வருடங்களுக்கு முன்பு இத்தகைய கடல்வளப் பிராந்திய எல்லைகள் இடப்படாமையால் இருநாட்டு மீனவர்களும் இயல்பான முறையிலேயே மீன பிடித் தொழிலில் ஈடுபட்டனர் எனச் சுட்டிக்காட்டினார். (உ-4)

களஞ்சியசாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அக்கால கட்டத்தில் இடம்பெற்ற பூமி அதிர்வின் போது, அச் செல்வங்கள் அனைத்தும் பூமியினுள் புதையுண்டு போனதாகவும் பூகற்பவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் புதையுண்டு போன அப்புதையலைப பெறுவது தொடர்பான சரியான தகவல்களைத் திரட்டுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரது கவனமும் இங்கு தற்போது திரும்பியுள்ள அதேநேரம், இதுபற்றிய மேலதிக விபரங்களைத் திரட்டுவதற்காக உலகப்புகழ்பெற்ற நஷனல் ஜோக்கிரபி நிறுவனப் பிரதிநிதிகள் குழுவொன்றும் ஓரிரு நாட்களில் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடததக்கது. (உ-18)

## கால் கோள் விழா

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை மத்திய கால்லூரியில் இவ்வாண்டுதரம் 1இல் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான கால்கோள் விழா எதிர்வரும் 16ஆம்திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-49)

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தில் கல்விமாணி கற்கை நெறியை 2004/2006 கல்வி ஆண்டில் பயிலுவதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கற்கை நெறிக்கு 600 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பித்த போதிலும் 400 ஆசிரியர்களே இப்பரீட்சைக்குத் தெரிவாகியுள்ளனர். (உ-7)

## பாடசாலை மீள ஆரம்பம்

(மருதங்கேணி)

முல்லைத்தீவு ஒதியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கடகிழமை முதல் இயங்கவுள்ளது.

1984 இல் ஏற்பட்ட இடம் பெயாவின் பின்னர் இப்பாடசாலை வள்ளி புனத்தில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## புனரமைப்பு

(நவாலி)

நீண்டகாலமாக சேதமடைந்திருந்த வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் உள்ள பிக்நெல் ஞாபகார்த்த விளையாட்டரங்கு தற்போது பாடசாலை நிர்வாகத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது. (உ-102)

இலங்கையின் கடல் வளப் பிராந்திய எல்லைக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் குறித்த பிரச்சினைகள் பெரும் சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகின்ற நிலையில் இது குறித்து நேற்று முன்தினம் சென்னையில் உள்ள இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் வைத்து இந்தியாவிற்கான இலங்கையின் துணைத் தூதுவர் சுமித் நெந்தலவைச் சந்தித்து இராமேஸ்வர மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

கையின் கடற்பிராந்திய எல்லைக்குள் அதிக வளம் காணப்படுகின்

சுட்டிக்காட்டினார். (உ-4)

## விமானப் பயணிகள் மீது சோதனை நடவடிக்கை

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச வமானநிலையம் உட்பட நாட்டின அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விமான நிலையங்களுக்குச் செல்லும் பயணிகள் மீது விமான நிலையத் தனிப்பட்ட பாதுகாப்பு ஊழியர்களால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், அவர்கள் பயணம் செய்யும் வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந் நடவடிக்கையானது நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விமான நிலையங்களின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி எம்.என்.மன்சூா தெரிவித்துள்ளார்.

இச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் விமான நிலையப் பணியாளர்களுக்கு விசேட பயிறசிகள் வழங்கப்படவுள்ளன.

சுற்றுலாப் பயணிகளிடம் இருந்தும் பணியாளர்களிடம் இருந்தும் கிடைக்கப்பெற்ற முறைபபாடுகளை அடுத்தே இப் புதிய திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பொறுப்பு தொடர்ந்தும் இலங்கை விமானப் படையிடமே இருக்கும் என விமான நிலையங்களின் பாதுகாப்பு தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். (தி-61)

## சர்வதேச தரத்திலான ஆரம்பப் பாடசாலை

### கிளிநொச்சியில் இன்று திறப்பு

(கிளிநொச்சி)

சர்வதேச தரத்திலான அனைத்து வசதிகளையும் கொண்ட ஆரம்பப் பாடசாலை ஒன்று கிளிநொச்சியில் திறக்கப்படவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நல கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள இப் பாடசாலை இன்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கல்வியுடன் கூடிய இணைப் பாட விதானச் செயற்பாடுகளை சிறுவர்கள் சர்வதேச தரத்தில் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த உபகரண வசதிகளுடன் இப்பாடசாலை இயங்கவைக்கப்படவுள்ளது.

தரம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் வழங்கப்படவுள்ள இக் கற்பித்தல்களில் முதல் கட்டமாக 3 வயது தொடக்கம் 5 வயதுக்குஇடைபட்ட சிறார்கள் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அறிவித்துள்ளது. (உ-4)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஜூன் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## கன்னி



**உத்திரம் 2,3,4 வது பாதம் வரை - அத்தம் 4 பாதங்கள் - சித்திரை 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

இது விரயத்து குரு. 2ல் கேது, 10இல டீசவ்வாய்,சனி சுக்கிரன்,எட்டில் ராகு 9ல் சூரியன், புதனும்சேர்ந்ததால் குளம், கடல் நீரில் எச்சரிக்கை தேவை. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உடன் இருக்கும் ஊழியர்களுடன் சிலசமயம் கருத்து மோதல்கள் உண்டாகும். இப்படிப்பட்ட நேரத்தில் கூடுமானவரை அமைதியைக் கையாள்வது நன்மையாகஇருக்கும். வாக்குவாதத்திற்கு இடமளிக்க வேண்டாம். பொதுவாக இந்த இராசிக்குரிய அனைவருக்கும் வழக்கு சம்பந்தமான ஈடுபாடு நன்றாக இருக்காது என்பதால் அவ்வழி விலகி நிற்பதுதான் நன்மை. கடன் விஷயம் கடைசியில் மனச் சலனப்போக்கை அதிகரிக்கச் செய்யும். அரசாங்க மனிதர்களிடமும் விலகிஇருக்கவேண்டி இருக்கும். எவ்வளவு முயன்றாலும் விதி என்பது விடாது. இயந்திரக்கருவி, வாகனம் வாங்குவது போன்ற உயர் நன்மைகளை உடையவர்களாக இருப்பீர். வருவாய் அதிகரித்து இருப்பதால் கடன், சுமையாக இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். புத்திரர், புத்திரியர்கள் தேக ஆரோக்கியம், கல்வி உயர்வும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். அரசியல் மனிதர்கள் மூலம் எதிர்பார்த்த அவசர உதவியை அரசாங் உயர்மட்ட அதிகாரிகள் மூலமே முடிக்கப் பெறுவீகள். வெளியூர் பிரயாணம் உடனுக்குடன் இருக்கும். இக்காலம் புண்ணியஸ்தல பிரயாணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு, லாட்டரி மூலமும் தனவரவு செய்யும் காலம்இது. உத்தியோகப்பிரிவினாகளுக்கு கடந்த காலமே உயர்வான பலன்கள் ஆரம்பித்து விட்டன என்றாலும் இக்காலமும் இலாகாவில் திருப்தியான மாற்றங்களை செய்யக்கூடும். உயர்மட்ட அல்லது சொத்துவகைப் பிரச்சினை இருந்து கொண்டே இருக்கும். சனி மாற்றம் பழையகடன் விஷயத்தில் கவனத்தைச் செலுத்தவேண்டிய காலம் இது. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பழைய சூழ்நிலை தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். உங்கள் பண்புகளில் மற்றவர் குறைகூறவும் செய்வர் உடன் இருப்பவர்களுடன் ஒரே சீரான போக்கு இருக்காது. ஊர்ப்பயணம் தடையாகும். தலைப் பிரிவு ஆண், பெண்களுக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கூடி கடைசி நேரததில் பாதிக்கக்கூடும் சனி அவன் தீமை செய்யான. கணவன், மனைவி உறவு திருப்தியாக இருக்கும் முக்கியஸ்தர்கள் சந்திப்பு கடிதத்தொடர்புகளும மனதிற்கு இதமான போக்கை உண்டாக்கும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு அகால உறக்கம், அகால உணவு, அலைச் சலும் இருக்கும். போட்டி, பந்தயம் விளையாட்டுப் போன்ற வகைகள் முழு திருப்தியளிக்காது. மாணவர்களுக்கு நன்மை தரும காலமே. வழக்கு, கடன் விஷயங்கள் நிற்பந்தம் தராது.

## துலாம்



**சித்திரை 3,4வது பாதம்-சுவாதி 4 பாதங்கள்-விசாகம் 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

நின்றிருந்த விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும். இக்காலம் நடுப்பகுதிக்கு மேல் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது போல் புத்திரர், புத்திரியர்கள் வகையிலும்

இவை அனைத்தும் உங்களுக்கு ஆதாயத்தைக் கொடுக்குமே தவிர நட்டத்தைக் கொடுக்காது. நாகரிகப் பொருட்கள் வாங்குவதும் பெண்களுக்கு புதிய உடைகள் ஆபரணச் செயற்கையும் உணடாகும். உத்தியோகப்பிரிவினர்களுக்கு பதவி உயர்வு அல்லது மாற்றம் முக்கிய அம்சமாக இருக்கும். வயிற்றுப்புண், காது, பல்வலி போன்றவை தோன்றி விலகும். கணவன், மனைவி உறவு கண்ணியமுடையதாக இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு காலம் கடந்த விஷயங்களில் சில இப்போது வந்து பாதிக்கும். இந்த நேரத்தில் தான் உங்கள் எதிரிகளுக்கு பலம் அதிகம்.

அனுகூலமாக வந்துசேரும். பெண்களுக்கு இது சிறப்புமிக்க காலமாகும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சியும் நல்ல திட்டங்களும் உதயமாகும். குடும்பத்தில் சுப செலவுக்கு தயாராக வேண்டும். கூட்டு முயற்சி பலன்தரும். பதவிஉயர்வு போன்றவற்றை எதிர்பார்க்கவேண்டும். கடன்வகை கௌரவத்தைக்குறைக்காது. வழக்கு தள்ளிப்போய்விடும். இந்த ஆண்டுக்கு செயற்படவேண்டிய விஷயங்கள் இப்போது உங்களை நெருங்கிக் கொண்டு இருக்கின்றன. சத்துருக்கள் நேர்முகவழி உங்களை ஒன்றும் செய்யாது. மறைமுக வழியில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சிலர் வாகனம் வாங்குவது, வாகனவழியில் ஏற்பட்ட வழக்குகளை சாதகமாக்கிக் கொள்வது போன்ற நன்மைகள் உண்டு. இந்தராசி கலைப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கு நம்பிக்கை தரும் நன்மைகள் இருக்கின்றன. அவை காதல், கல்யாண முயற்சி, ஆபரணங்கள் வாங்குவது, இரகசியக் கடிதம் எழுதுவதும் உண்டாகும். இயந்திரத் தொழில் வாகனம் வைத்து தொழில் நடத்துபவர்களுக்கு பிற்பகுதியில் எடுத்த காரியம் எல்லாம் வெற்றியும், வேகமான பேக்கும் இருக்கும்.

# உங்களுக்கு எப்படி?

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாதம் அனுஷம் 4 பாதங்கள்-கேட்டை 4 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இம்மாதம் ஆரம்பம் அட்டமத்தில் மறைந்து கிரகங்கள், சனி, செவ்வாய், சுககிரன் பத்தில் குருவும், ஆரம்பத்தில் இருந்தே ஒரு நிலையான போக்குடையதாக இல்லை. தொழில்வழி மந்தமாகவே இருக்கிறது. தூரத்துக் கடிதம் சலனம் கொடுப்பதாகத்தான் இருக்கும். உறவினர் வழியிலும் இடை இடையே கசப்பான அனுபவங்களும் கிட்டும். எப்போதோ செய்ததின் விளைவு இப்போது உங்களை மற்றவர் குறை கூறவேண்டி இருக்கும். அவசரப் பேச்சு ஆத்திரச் செயல் இவை கூடாது. அரசாங்க உயர்மட்ட மனிதர்கள் சந்திப்பு ஓர் அளவு திருப்தியாக இருந்தபோதிலும், நடைமுறைக்கு வரவில்லை. குடும்பச் சொத்துவகையில் ஏற்பட்ட சலனப் போக்கு இப்போது குறைந்து இருக்கின்றன. சிலர் அயல் நாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்வது அவசியமாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு, சூதாட்டம் போன்ற ஈடுபாடு மந்தமாக இருக்கும். வழக்கு இருப்பின் செலவோடு முடியும் பாதிப்பு இருக்காது. கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு கூட்டாளிகள் மனபேதம் முன்பு இருந்ததைவிட இப்போது குறைவு. பயம் அகற்றி தன்னம்பிக்கை கொள்ளும் காலம். வழக்கு, கடனைப்பற்றி கவலைப்படவேண்டாம். அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு இடமாற்றல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவைக்கும். கணவன், மனைவி உறவு சுமுகமாக இருக்கும். கலியாணம், காதல் விஷயங்கள் மனத்திருப்தியளிப்பதாக இருக்கிறது. குழந்தைகள் சீதளத்தால் பாதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. சுப விஷயம் குறித்த பிரயாணம் செல்வதால், தெய்வ தரிசனம் போன்றவையும் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும். பிறர் தன்மீது கூறும் குறைபாடுகள் மிக்கதாக இருக்கும். இதனால் மற்றவர்களுடன் வாக்குவாதமும், மன பேதமும் நிகழும் உங்கள் செயலில் எச்சரிக்கையாக இருக்க வேணடும். உங்கள் எழுத்துப் பேச்சுக்களே உங்களுக்கு எதிரியாக அமையக்கூடும். குறிப்பாக பெண்கள்தான் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். உத்தியோகப் பிரிவினர்களுக்கும்தான் இவை. என்றாலும் இடம்மாறு தல், பதவிஉயர்வு இவற்றை எதிர்பார்க்கவேண்டும். கடன் வகை கௌரவத்தைக் குறைக்காது. வழக்கு தள்ளிப்போய் விடும். இந்த ஆண்டுக்கு செயல்படவேண்டிய விஷயங்கள் இப்போது உங்களை நெருங்கிக்கொண்டு இருக்கின்றன. சத்துருக்கள் நேர்முகவழி உங்களை ஒன்றும் செய்யாது, மறைமுக வழியில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேணடும். சிலர் வாகனம் வாங்குவது, வாகன வழியில் ஏற்பட்ட

அரசியல் வாதிகளுக்கு பிரச்சினைகள் ஆரம்பத்தில் இருந்தே மருத்துவ செலவுகளும் உண்டாகும். பிரயாணம், விருந்துண்ணல் போன்றவற்றை உண்டாக்கும். அந்த இடத்தில் வாக்கு வாதத்திற்கு இடம் தரவேண்டாம். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் மாறுதல் இருக்கும். இது இலாகா மாற்றத்தையாவது செய்யும். குழந்தைகள் ஆரோக்கியம் திருப்தியாக இருக்கும். கூட்டு முயற்சி இயக்கத்தில் சிறு கருத்துக்கள் வேறுபாடு இருக்கும். இந்த நிலைமை வளரவிட்டால் பெரிதாக ஆகிவிடும் என்பதை மறக்க வேண்டாம். உறவினரைவிட மூன்றாவது மனிதர்களைச் சந்தித்து முன் யோசனையுடன் ஆவன செய்வது நல்லது. சிலருக்கு இது வழக்காகவும் தொடரக்கூடும். தொழில் சம்பந்தமான மனைவி உறவு கவர்ச்சியும், கண்ணியம் உடையதாகவே இருக்கும். குடும்பத்திற்கு புதிய உடைகள் அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாகும்.

## மகரம்



**உத்தராடம் 2,3,4வது பாதங்கள்-திருவோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

உங்கள் நெருங்கிய நண்பர்களுக்கு நீங்கள் உதவியாக இருப்பீர்கள். பூமி, வீடு போன்ற பொருள் விற்கவும், வாங்கவும் உங்களால் பெரிய நன்மை அவர்களுக்கு இருக்கின்றது. தாய்வழி உறவினில் கருமச்செலவும் உண்டாகும் காலம். உத்தியோகப் பிரிவினர்களுக்கு பதவி உயர்வு தடையிருக்கும். புததிரர் கல்வி குறையும், புத்திரியர் கல்வி உயரும் இலாகா மாற்றம் தவிர்க்கமுடியாதது. நண்பர்கள் சிலரை சந்திப்பது நலல ஆலோசனைக்கு வழிவகுக்கும். குடும்ப வகைக்கு நாகரிகப் பொருள் சோக்கையும் உண்டாகும். சகோதர, சகோதரி வகையில் புகைந்துகொண்டிருந்த விஷயங்கள் இப்போது வெடித்துவிடும். இதனால் சொத்து வகையில் பெரிய மாற்றத்தைச் செய்யவேண்டிய அவசியம் உருவாகும். அரசாங்கத்தில் எழுத்துமூலம் உத்தரவை எதிர்பார்க்க வேண்டி இருக்கிறது. நீங்கள் செயல்படும் விதம் மற்றவர்களை திகைக்க வைத்துவிடும். என்பது உண்மையே என்றாலும் சிறிய இடையூறுகள் இல்லாமல் இல்லை. பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதப்போக்கு உண்டாகும். பணம் கொடுக்கல், வாங்கல் ஒரே சீராக இருந்தாலும் பற்றாக்குறை என்பது கூடவே இருக்கிறது. பழைய பொருட்கள் சில்வற்றை விற்பதும் இருக்கும். வாகனம் மாற்றுவது அல்லது விற்பதும்கூட இருக்கும். கடன் இல்லாமல் இல்லை. ஆனால் கவலை தரும அளவுக்குக் கடுமையாக இருக்காது. உறவு வழியில் துற்கரும செலவையும உண்டாக்கத்தக்கது. குடும்பத்தில் மூததவர்கள் எவருக்கேனும் அறுவைச் சிகிச்சையும் செய்யவேண்டி யிருக்கும். இது முக்கியம். மேலும், சிலர்

நடுப்பகுதிக்கு மேல் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது போல் புத்திரர், புத்திரியர்கள் வகையிலும் கவனம் செலுத்தவேண்டும். விபத்தில் அடிபடுதல் போன்றவை அவர்களுக்கு நிகழத்தக்கவை. குடும்பத்திலும் கணவன், மனைவி இடையே சிறு பூசல் உதயமாகும். இப்போது உங்கள் சொல் சித்திபெறும். மற்றவர் பாராட்டு மூன்றாவது மனிதர்களிடத்தில் பெறாமையை உண்டாக்கும். உங்கள் கருத்தை அறிய மற்றவர் காத்திருப்பர். மறைக்கப்பட்ட விஷயங்கள் சில உங்களுக்கு எதிராக இருந்ததை இப்போது அறியலாம். தைரிய உயர்வு, தன உயர்வு போன்றவை குறிப்பிடத்தக்கது குடும்பத்துப் பொருட்களை மீட்கும் காலம் இது. சிலர் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனத்தை வாங்குவது உண்டாகும். உங்களுக்கு எதிராக இருந்த எந்தச் செயலும் பாதிக்க முடியாது. கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு தொழில்வழி உயர்வு தனநிலையில் முன்னேற்றமும் இருக்கிறது. புதிய ஒப்பந்தங்கள் சிலவும் குறிப்பிடத்தக்கவை. கொடுக்கல், வாங்கலில் உங்கள் சூழ்நிலை இப்போது முன்னேறி வருகின்றன. அடுத்தடுத்து எழுத்துவகை நன்மைகள் இருக்கின்றன. அரசாங்கவகை மனிதர்களால் சில அனுகூலமும் கடிதஉத்தரவும் திருப்தியளிக்கும். மாணவ, மாணவிகளுக்கு சந்தோஷச் செய்தி காத்திருக்கிறது. விருந்து கொள்வது, பந்தயமும் வெற்றிதேடி வரும். தூரத்துச்செய்தி தூக்கம் அல்லது துன்பத்தைக் கொடுப்பதாக இருக்கும். வாகனம், பிரயாணம் இதில் கவனம் மிக்கவராக இருக்கவும். வழக்குக் கட்டுப்பட்டது அல்ல. விட்டுப்போன உறவு மீண்டும் வரும். நண்பர்கள் உறவினர்கள் சந்திப்பு மகிழ்ச்சியான போக்கை உண்டாக்கும். சிலர் நாகரிக வாகனம் வாங்குவது போன்ற செலவுகளையும் பெறுவர் குடும்பத்து சம்பந்தமான பிரச்சினைகளை சற்று விட்டுப்பார்க்கவும், உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் மாறுதல் இருக்கும் இது இலாகா மாற்றத்தையாவது செய்யும். குழந்தைகள் ஆரோக்கியம் திருப்தியாக இருக்கும். கூட்டு மனிதர்கள் மிக மிக இணக்கமான போக்கில் இயககம் கொள்வர். விட்டுப்போன தொடர்பு மீண்டும் இனிமையான சூழ்நிலையில் வந்துசேரும். தொழில் சம்பந்தமாக அலைச்சல் இடப்பெயர்ச்சியும கூட மிக முக்கியமாக இருக்கும். மறைமுக வழியில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சிலர் வாகனம் வாங்குவது, வாகன வழியில் ஏற்பட்ட வழக்குகளை சாதகமாக்கிக்கொள்வது போன்ற நன்மைகள் உண்டு. மூத்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பதை அறியலாம். தொழில்வழி சுணக்கமின்றி சென்றுகொண்டே இருக்கும். உங்களை விழிப்படையச் செய்யும். இந்தக் குரு செய்தொழில்வழி, குடும்பம் இந்த வகையும் அதிகமாக கவனம் உடையவர்களாக இருப்பீர்கள். உங்களுக்கு அரசியல் சம்பந்தப்பட்டவர்கள் வெகு அமைப்பாக காரியங்களுக்கு உபயோகமாக இருக்கின்றனர். முன்பு எழுத்து ஒப்பந்த வழியில் பாதிக்கப்பட்டவையும் மன திருப்தியாகக் கூடிவந்துவிடும். சகோதர, சகோதரி வகை முக்கிய செலவுகள் இருக்கின்றன. குடும்ப உறவில் நடக்கும் விஷயங்களில் கலந்து கொள்வதும் விருந்து உண்பதும் உண்டாகும்.

## தனுசு



**மூலம் 4 பாதங்கள்-பூராடம் 4பாதங்கள் உத்தராடம் முதல் பாதம் வரை 9 பாதங்கள்**

இப்போது நீங்கள் மூன்று கிரகங்களின் ஆழ்ந்த பார்வையில் இருக்கிறீர்கள். செவ்வாய், சனி, சுக்கிரன் 7ல் உங்கள் நம்பிக்கையும் இப்போது உங்களை உயரவைத்து இருக்கின்றது. கடன் வழக்கு வகைகள் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். அரசியல்வாதிகள் மிகவும் அனுசரணையாக இருப்பர். அன்பும் பண்பும் நிறைந்தவர்களாக இருப்பீர்கள். உத்தி யோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு விடுமுறை தேவைப்படும். தேக சுகவீனம் கைகாலில் காயம்படுவதால் சிகிச்சை முதலானவையும் ஏற்படும். குடும்ப சொத்து வகையில் சகோதர, சகோதரி மனபேதம் எழுவதும் குறிப்பிடத்தக்கது. நடுப்பகுதிக்கு மேல் உடல் ஆரோக்கியம் திருப்தியளிப்பதாக இருக்கிறது. கணவன், மனைவி உறவில் கவர்ச்சிகரமான போக்கு, குடும்பத்துக்கு புத்தாடை சித்தி, புதிய ஆபரணம் வாங்குவது உண்டாகும். இந்த ராசி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உயர்வு திருப்தியாக இருககும். மலை வளம் சூழ்பிரதேச கடிதத்தை எதிர்பார்த்து

மூததவர்கள் எவருக்கேனும் அறுவைச் சிகிச்சையும் செய்யவேண்டியிருக்கும். இது முக்கியம். மேலும், சிலர் நாகரிக வாகனம வாங்குவது அல்லது மாற்றியமைப்பதும் உண்டாகும். எழுத்து மூலம் அரசாங்க ஒப்பந்தம் உண்டாவதும் குறிப்பாக நன்மையாகும். கடந்தகால அனுபவங்கள் சிலவழியில் உங்களை ஆபத்தில் இருந்து காப்பதாகவும் இருக்கிறது. சார எல்லை சில சமயம் கெடுதலை உருவாக்கினாலும் சனி நன்மைகளையும் செய்வான். குடும்பத்தில் தொடர்ந்து சில பாதிப்புகள் இருக்கும். எனவே நீங்கள் சிலவகையில் தனித்துநின்று செயல்பட வேண்டியும் இருக்கும். தனநிலை நன்றாகவே இருக்கிறது. சில வேலைகள் மட்டும தாமதமாகின றன. அரசாங்க மனிதர்கள் மட்டும் சிலர் முன்பு உங்களுக்கு உதவியாக இருந்தவர்கள் வேறுபட்டு நிற்பதை உணரலாம். குடும்பத்தில் ஏதோ ஓர் இடைவெளி உண்டாகியிருக்கும். இதனை அகற்ற முயற்சிக்கவும். எழுத்துமூலம் சில நன்மைகளும் இருக்கின்றன. தொழிலில் போட்டி உருவாகி இருப்பதையும் உணரலாம். சகோதர சகோதரி வகையில் நல்லபோக்கு உருவாகிவரும். குழந்தைகள் தேக ஆரோக்கியம், கல்வி, தொழில் இந்தவகை சிறப்பாக அமைந்திருக்கின்றன. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உங்களுக்கு அலைச்சல் உடையதாக இருக்கிறது. தெய்வ வணக்கம் அவசியமாகும். முன்பு பட்டகடன் சம்பந்தமாக சிலருக்கு வழக்கு உருவாகும் இதனால் தொழில் பாதிப்பு இல்லை. என்றாலும் சற்று அலைச்சல் உண்டாகி விடுகிறது. குடும்ப சொத்துக்கள் சம்பந்தமான சிககல் இருந்துகொண்டு இருந்தாலும் இது புகைபோன்றது. நீங்கள் மூன்றாவது மனிதருக்கு ஈடுபட்டு செய்யும் நன்மைகள் உங்களையே ஒரு வகையில் பாதிக்கும். என்பதால் முனயோசனையுடன் நடந்துகொள்வது நல்லது. புத்திர, புத்திரியர் ஆரோக்கியம், கல்வி உயர்வு இருக்கிறது. கவலை வேண்டாம். குடும்பத்தில் நாகரிகப்பொருட்கள் வாங்குவது உண்டாகும். திருமணம் போன்ற சுப செலவுகளும் உண்டாகும்.

(தொடரும்)

**சோதிடமேதை ராமன்**

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# மீனவர்கள் கைது செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்

## இலங்கை அரசிற்கு இந்தியத் தூதரகம் கடிதம்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் நடைமுறைகளை உடனடியாக நிறுத்தக்கோரி இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவராலயம் இலங்கை அரசாங்கத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் பெரும் சர்ச்சைகள் உருவாகி வருகின்றன.

இதனைத் தவிர்ப்பதற்காக அத்துமீறி நுழையும் இந்திய மீனவர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அத்துமிறி நுழையும் மீனவர்களைக் கைது செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனக் கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படிக் கடிதத்தில், இதுவரை காலமும் இவ்வாறான சம்பவங்களில் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் இராமேஸ்வரத்தில் உள்ள பாம்பன் பாலத்தினூடாக போக்குவரத்தை ஸ்தம்பிதமடையச் செய்யும் விதத்தில் போராட்டங்களை மேற்கொள்ளப் போவதாக தமிழக மீனவர்கள் சங்கத்தினர் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

## வர்த்தகர் சுட்டுக்கொலை

போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த நபர் ஒருவர் நேற்று முற்பகல் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கொழும்பு பாலக்கரை 391இலக்க தோட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இரு போதைவஸ்து வியாபாரிகளுக்கிடையே ஏற்பட்ட தகராறே இக்கொலைக்கு காரணம் என ஆரம்ப விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளதாக கிரான் பாஸ்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (தி)

## சோதனைக் கெடுபிடி

(கொழும்புத்துறை)

பாஷையூர் மீன்சந்தைக்கு, வாங்குதல் மற்றும் விற்றல் செயற்பாடுகளுக்காகச் செல்லும் பொது மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளை படையினர் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.மேற்படி சந்தைக்குச் செல்லும் பொது மக்களை, தீவிர சோதனை நடாத்திய பின் னரே உட்செல்லப் படையினர் அனுமதித்து வருகின்றனர். (உ-51)

## மின்விளக்கு பொருத்தப்படாத வீதிகளில் கள்வர் கைவரிசை கலாசாரச் சீரழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள வீதிகள் பல மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் ஒளியிழந்து காணப்படுகின்றன.இதனைப் பயன்படுத்தி அப் பகுதிகளில் கள்வர் கைவரிசை , கலாசாரச் சீரழிவுகள் என்பன தாரா ளமாக இடம்பெறுவதாகவும் சுட் டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை, மேற்படி சீரழிவு இடம்பெறும் இடங்களை இனங் கண்டு முன்னுரிமை அடிப்படையில் மின் விளக்குகளைப் பொருத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ள யாழ். மாநகர சபை எல்லா இடங்களுக்கும் மின் விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைக்கு நிதிப் பற்றாக்குறை தடையாக இருப்பதாக இலங்கை மின்சார சபை சுட்டிக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர கடந்த ஆண்டு யாழ். மாநகர சபை நிதியில் இருந்து இரு கட்டங்களாக் 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டதுடன் இந் நிதி மூலம் மின்இணைப்பு வழங்க மக்கள் மீள் குடியமர்ந்த இடங்கள் சில தெரிவு செய்யப்பட்டுள்ளன. (உ-3)

## ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தேர்தலை எதிர்கொள்ளத் தயார்

### அமைச்சர் ஜெயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எந்த நேரத்திலும் எந்தவொரு தேர்தலையும் எதிர்நோக்கத் தயாராக உள்ளது என வடிகாலமைப்பு நீர்வள முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த 7 வருட காலத்தில் அக்கட்சியினால் மேற்கொள்ள முடியாதிருந்த திட்டங்களையும் அபிவிருத்திகளையும் கடந்த 2வருட காலத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சாதித்து வெற்றியையும் கண்டுள்ளது.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஜனாதிபதியும் எதிர்க் கட்சியினரும் பிரதமரின் திட்டங்களையும் சமாதானத்தையும் குழப்பும் சதி முயற்சிகளில் மறை முகமாகச் செயற்பட்டனர்.

ஆனால், அது கைகூடாத காரணத்தால் நாட்டின் பாதுகாப்பு என்ற பொய்க் காரணத்தைக் கூறிக் கொண்டு 3 அமைச்சுக்களையும் பொறுப்பெடுத்தார்.

இதனால், சமாதான முயற்சிகளில் முற்றுமுழுதான ஸ்தம்பித நிலை ஏற்பட்டது. இம்முயற்சிகளை மீண்டும் தொடருமாறு பிரதமர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறிய போதிலும், அவர் அதனை உதாசீனம் செய்து வருகிறார்.

நாட்டின் அபிவிருத்தியும் மக்களின் பாதுகாப்பும் அவரது குறிக்கோள் அல்ல. மாறாக தனது ஆட்சியை தக்க வைத்துக் கொள் வதே அவரின் பிரதான குறிக்கோள்.

இம்முயற்சிகளின் ஒரு கட்டமாகவே அவர் பிரதம நீதி யரசர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்திவருகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(தி-60)

## அமைச்சுக்களை வசப்படுத்தியதன் மூலம் ஜனாதிபதி சாதித்தது என்ன?

### கேள்வியெழுப்புகிறார் பீரிஸ்

(கொழும்பு)

ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் முன்னெடுப்பதற்கு மக்களிடமிருந்து புதியதொரு



தொழிற்சங்கத்தினர்,இளைஞர்கள் ஆகியோரை உள்ளடக்கியதான ஒரு பரந்த மக்கள் அமைப்பு இன்று ஒரு தேவையாக ஆகிவிட்டது.

அத்தகைய ஒரு அமைப்பே அரசியல்வாதிகள் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதை கட்டுப் படுத்துவதாயிருக்கும் .

அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சனியன்று அவிசாவளையில் நடைபெற்ற நிகழ் வென் றில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்க பதவி

பாதுகாப்பு அமைச்சைப் பொறுப் பேற்றதன் மூலம் ஜனாதிபதி செய்து முடித்தது என்ன? மணிராசன் குளம் முகாம் அதே இடத்தில் இருக்கிறது. ஜனாதிபதியின் கற்பனையில் இருந்த புலிகளின் 44 முகாம்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இல்லை.

சட்ட ஒழுங்கு நிலையில் மாற்றங்கள் ஏதும் இல்லை. ஆனால் சந்தர்ப்பவாத அரசியல் சூழ்ச்சித்தனங்களால் மக்கள் பாதிக்கப்பட்டு விட்டார்கள் இதனால் சமாதானத்தை நாட்டில் முன்

## கருத்தொருமிப்பு இன்மையே சங்கரியை விலக்கக் காரணம்

### ரவிராஜ் எம்.பி. விளக்கம்

(மந்துவில்)

விடுதலைப் புலிகளின் கொள்கைகளை நாம் ஏற்று அதன்படி செயற்பட்டு வருகிறோம் ஆயினும் எமது கொள்கைகளை ஏற்று நடக்காத காரணத்தால் ஆனந்த சங்கரியைத் தலைமைப் பதவியிலிருந்து விலக்கியுள்ளோம்.

இதனாலேயே அவர் நீதிமன்றம்

அமைச்சுப் பொறுப்புக்களை நாமும் பெற்றுக்கொள்ள முடியும். அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவென ஒரு தொகைப் பணம் வழங்கப்படுகின்றது. அவ்வாறு அரசாங்கத்தால் வழங்கப்படும் பணத்தைக்கொண்டே நாம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்றோம்.



பரந்த கூட்டமைப்பு உருவாக வேண்டும். தொழில்துறை நிபுணர்கள், மதகுருமார்கள், ஆசிரியர்கள்,

யில்,

ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 60நாட்களுக்குள் ஒரு யுத்த நிறுத்தத்தை வெற்றிகரமாக கொண்டு வந்தார்.

ஆனால் அதனை இன்று அமுல்படுத்த முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்.

கப்பட்டு விட்டார்கள் இதனால் சமாதானத்தை நாட்டில் முன்னெடுப்பதற்கு ஒரு பரந்த அரசியல் மக்களமைப்பு தேவை எனக் குறிப்பிட்டார். (உ-6)

## தெரிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஆசிரிய ஆலோசகர்களிற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-7)

யிலிருந்து விலக்கியுள்ளோம்.

இதனாலேயே அவர் நீதிமன்றம் வரை செல்ல நேரிட்டுள்ளது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நவசக்தி சன சமூக நிலையத்தில் நடைபெற்ற மந்துவில் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

அரசாங்கத்தின் கொள்கைகளை நாம் ஏற்று நடப்போமாயின்

விருத்திப் பணிகளை மேற்கொள்கின்றோம்.

இதனடிப்படையில், மந்துவில் வேரகாடு வீடமைப்புத் திட்டத்தில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு ஏற்ற வகையில் வீடமைப்பு அதிகார சபையுடன் தொடர்புகொண்டு உரிய பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், மந்துவில் பிரதேசத்தில் நூல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (உ-54)

# ஓய்வூதியர்கள் அனுபவிக்கும் சிரமங்களைப் போக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியம் பெறுபவர்கள் தமக்கு எழுகின்ற பிரச்சினைகள் குறித்து தத்தம் பகுதிப் பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொண்டு உடனுக்குடன் தீர்வுகான வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரச்சினைகள் குறித்து பிரதேச செயலகங்கள் யாழ். அரச அதிபர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்,நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு வீண் சிரமங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் விதத்தில் யாழ். அரச அதிபர் மேற்கொண்ட முயற்சியின் பலனாய் இந்நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். செயலகத்தில் இயங்கி வந்த ஓய்வூதியக் கிளை கடந்த 4 மாதங்களுக்கு முன்னமே மூடப்பட்டு அதன் பணிகள் பிரதேச செயலகங்களிடம் கைமாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.பிறப்பு, இறப்பு பதிவுப் பணிகளும் செயலகங்களுடன் இணைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

# சமாதான முயற்சியை முன்னெடுக்கின்ற முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி ஏற்க வேண்டும்

## லங்கா சமசமாஜக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

சமாதானச் செயற்பாடுகளின் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சி கேட்டுள்ளது.

மேற்படி கட்சி இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியினால் 3அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டமையினையடுத்து சமாதான முயற்சியில் இருந்து பின்வாங்கிவிட்டார்.

இத்தகைய நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லும் விடயத்தில் பிரதமர் அர்த்த புஷ்டியான ஒத்துழைப்பை வழங்குவார் என எதிர்பார்க்கமுடியாது.

எனவே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதேசமயம், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் கடந்த 2வருடங்களாக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக முயற்சித்திருக்கின்றன.

எனவே, ஜனாதிபதியும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தி அரசியல் ரீதியாக தீர்வு ஒன்றைக் காண முன்வர வேண்டும்.

அவ்வாறு ஜனாதிபதியால் ஏற்படுத்தப்படும் தீர்வை அரசாங்கம் நிராகரிக்காது என நாம் நம்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-61,10)

# நெஞ்சம் நெக்குருகும்

# நீங்கா நினைவுப் புகழ்க் கலசம்

மண்ணில்
13
05
1928



விண்ணில்
14
01
2003

திருமதி

## V.M. கணபதிப்பிள்ளை பராசக்தி

திதி: வைகுந்த ஏகாதசி

ஆயிரம் மலரில் ஒருமலர் ஆனீர் - எம்
அகத்தில் ஒளிர்ந்த திருவிளக் கானீர்
அன்பும் அறனும் அறிவும் கொண்டு
அகிலத் துயர்ந்தெம் அருகிருந்தீர்
இன்பத் தாயே! இதமார் அமுதே
இமயம் அளந்த புகழுருவே - உம்
அன்பின் நாமம் நிலைத்திருக்கும் - எம்
அகத்தில் வாழ்வீர் அஞ்சலித்தோம்!

★ ஆருயிர் அன்னையின் ஆத்ம சாந்திக்கு எம் அகநெகிழும் அஞ்சலிகள்.

டச்சுவீதி,
சாவகச்சேரி.

(C/7173)

V. M. K. குடும்பத்தினர்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.
-குறள்

வலம்புரி

## பொதுநூலகத்தை திறப்பதற்கு யார் தடை!

யாழ்.பொது நூலகத்தைத் திறக்குமாறு கோரும் படலம் இப்போது தீவிரமடையத் தொடங்கியுள்ளது. பொதுநூலகத்தை திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது, முழுமையாக புனரமைக்காமல் அதனைத் திறந்து வைக்கக் கூடாது என்ற கோரிக்கை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களாலும், புத்திஜீவிகள் சிலராலும் முன்வைக்கப்பட்டிருந்தது.

சிங்களப் படைகளால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ்.பொது நூலகம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்படவேண்டும் என்ற கருத்து ஒருதரப்பாலும், சிங்களப் படைகளால் தீக்கிரையாக்கப்பட்ட நூலகம் ஒரு ஞாபகச் சின்னமாக அப்படியே பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து இன்னோர் தரப்பாலும் முன்வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சிங்களப்படைகளால் எரித்து நாசமாக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்தைப் புனரமைக்கவேண்டும், புனரமைக்காமல் ஞாபகச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற வாதப் பிரதிவாதங்களின் மத்தியில் யாழ்.பொது நூலகம் புனரமைக்கப்பட்டது.

எனினும் இந் நூலகத்தின் புனரமைப்பு முழுமையாக்கப்படாமல் அதனை திறந்து வைக்கக் கூடாது என்ற கோரிக்கை வலுப்பெற்றதனால் அதனைத் திறந்து வைக்கும் நிகழ்வும் பிற்போடப்பட்டது.

பொது நூலகத்தை முழுமையாகப் புனரமைக்காமல் திறந்து வைப்பதன் மூலம் ஏனைய புனரமைப்புப் பணிகள் விடுபட வாய்ப்புண்டென்ற நியாயப்பாடு அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனினும் புனரமைக்கப்பட்ட பொது நூலகத்தை திறக்காமல் மூடிவைப்பது நியாயமானதா? என்ற வாதப் பிரதிவாதங்களும் இடம்பெறவே செய்தது. இதன் ஓர் அம்சமாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர் அரங்கத்தில், சிறுவர்களால் பெரியவர்களிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் 'யாழ்.பொது நூலகத்தை திறந்து எமது வாசிப்புக்கு உதவுங்கள்' என்பதும் இடம்பெற்று இருந்தமை இங்கு நோக்குதற்குரியது. யாழ்.மாவட்ட நீதிபதி, வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், புத்திஜீவிகள் மத்தியில் நடைபெற்ற சிறுவர் அரங்கத்தில் முன் வைக்கப்பட்ட, பொது நூலகத்தை திறக்க வேண்டும் என்ற விடயம் அன்று எடுபடவில்லை.

எனினும் இப்போது யாழ்.பொது நூலகத்தைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. இது குறித்து யாழ்.ஆயர் மேதகு சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் அவர்

# நீர்வை ஊருக்குப் பெருமை சேர்த்த

# சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள்

தமிழ் நாட்டின் திருவுத்தரகோச மங்கையிலிருந்து ஈழத்திற்கு வருகை தந்த பரம்பரைக் குரு வழித் தோன்றலும், நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் கோவில் பிரதம குருவும் கோப்பாய் நாவலர் பாடசாலை முன்னாள் தலைமை ஆசிரியர் அமரர் சிவஸ்ரீ சு.கார்த்திகேய ஐயர் அவர்களுடைய புத்திரனுமாகிய சிவஸ்ரீ கா.சாம்ப சதாசிவக குருக்கள் நர்வை ஊரில் அந்தணர் குலத்திலகமாக வாழ்ந்தவராவார்.



1927 ஆம் ஆண்டு பிறந்த இவர் நர்வேலி அத்தியார் இநதுக் கல்லூரியிற் கல்வி பயின றவராவார். அன்றைய கால உயர் தர வகுப்பு வரை கல்வி பயின்ற இவா இளவ யதிலேயே ஆலய குருத துவப் பணியிலும் தமிழ், சமஸ் கிருதக் கல்வியிலும் நாட்டமுடையவரானார். இளம் பராயத்திலேயே சிவாச்சாரியாராகச் சமயப்பணிகளில் பக்த கோடிகளின் பெருமதிப்பையும், பாராட்டுதல்களையும் பெறலானார்.

### மறைந்தார் மாண்பு

சுமார் 55 ஆண்டுகளாக அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பிரதம குருவாக கடமையாற்றியமை இவரின் தனிப்பெருமையாகும். இவர்காலத்திலே சரித்திரப் பிரசித்திவாய்ந்த அரசகேசரி விநாயகர் ஆலயம் படிப்படியாக வளர்ந்தமை கவனிக்கத்தக்கது. தறபோது உயர்ந்த இராஜகோபுரமும் புதிதாக அமைத்து முடியும் தறுவாயில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. நர்வை ஊரின் சமய, சமூக பணிகளில் இப்பெரியாரின் பங்கு மகத்தான தெனலாம். ஆலயச் சுழலில் அறப்பணிகள் சிறக்க வேண்டும். எமது சமுதாயம் நல்லதொரு பண்புள்ளங் கொண்டதாக வாழவேண்டும் என்றும் அவாவுடையவராய் ஸ்ரீகணேசா சன சமூக நிலையம், அறுபத்து மூவர் குருபூஜை, திருநாவுக் கரசர் மடாலயம், ஸ்ரீகணேசா முன்பள்ளி, ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் காப்பாளராக இருந்து அவ்வப்போது எல்லோருக்கும் நல்ல ஆலோசனைகள் கூறிவந்தமை மறக்க முடியாததாகும்.

நல்ல ஆளுமைத்திறனும் குருத்துவப் பணியில் கண்டவுடன் யாவரும் கவரக்கூடிய செயற்திறனும் ஆலயவாயிலிற் பார்ப்போர் பிள்ளையார் என்றே வாய்விட்டு அன்புடன் அழைக்கும் விதமும் அவருக்கு உரியதொரு தனிச்சிறப்பாகும்.அந்தணர் குலத்தின் குருத்துவ ஒழுக்கத்திற்கு இலக்கணம் வகுத்தவராகக் காணவும், பேசவும் இனியராகக் காட்சிக்கெளியராக சீலம் மிக்கவராய் அரை நூற்றாண்டு ஆற்றிய பணியின் பெருமையாற் "சதாச்சாரக் கிரியா மணி" எனக் கௌரவிக்கப்பட்டவராவார்.

### நீர்வை மணி

யாழ். குடாநாட்டில் பல்வேறு ஆலய கும்பாபிஷேக மஹோற்சவக் கிரியைகளைச் செய்து பரந்தளவு மக்களின் அன்பிற்கு ஆளான இவர் 77 ஆண்டுகள் வாழ்ந்து நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலயச் சூழலை சைவ மணங் கமழும்படியான புனிதமானதொரு பகுதியாக எல்லோரும் போற்றும் விதத்தில் பல்வேறு நற்பணிகளிற் பங்கு கொண்டவராய் விளங்கினார்.

எதிர்பாராத விதமாக இப்பெரியாருக்கு ஏற்பட்ட கொடிய நோய் இவரை சென்ற ஜனவரி 2ம் நாள் இவ்வுலகினின்றும் பிரித்துவிட்டது. இவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் அவர் வாழும்பொழுது செய்த நற்பணிகள் என்றும் அழியாது நின்று நிலைத்து என்றும் அவரை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

ஒரு ஊரின் பெருமைக்கும் சிறப்பிற்கும் அந்தந்த ஊர்களில் வாழும் பெரியோரும் ஊரில் உள்ள அறப்பணி, பொது ஸ்தாபனங்களும், கல்விக் கூடங்கள், ஆலயங்கள் போன்றனவுமே காரணமாக அமைகின்றன. இந்த விதத்திலே அமரர் கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்கள் நீர்வையூருக்குப் பலவிதத்திலும் பெருமை தேடித்தந்த பெரியாராவார்.

கல்வி ஒழுக்கங்களிற் சிறந்தவராகவும் ஊரின் நலன்புரி ஸ்தாபனங்களிலும் பங்குகொண்டு தமது ஊருக்குப் பெருமை சேர்த்ததனால் அழிந்தும் அழியாத புகழுடம்புடன் நிலைத்திருக்கும் சிறப்புப் பெருமையைப் பெற்றவரானார். சிவஸ்ரீ சாமபசதாசிவக் குருக்கள் எனலாம். □

# மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### தமிழ் நாட்டு மீனவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தடுத்து வைத்திருக்கும் இந்திய மீனவர்களையும், அவர்களது விசைப்படகுகளையும், விடுவிக்க இந் திய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எடுக்கத் தவறினால், எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் இராமேஸ்வரம் பாம்பன் பாலச் செயற்பாடுகளை ஸ்தம்பிதம் அடையச் செய்யும் வகையில் போராட்டம் நடத்தப் படும் என தமிழ் நாடு, புதுவை மீனவர்கள் கூட்டமைப்பு மத்திய அரசை எச்சரித்துள்ளது.

சுமார் 68 இந்திய விசைப்படகுகளும்,11 நாட்டுப் படகுகளும், 89 மீனவர்களும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர்.

தெரிவித் திருப்பதாகத் தமிழகப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (தி-61)

# சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் நடவடிக்கை துரிதம்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் 45 வகையான தொழில்நிறுவனங்களுக்கு 2004ஆம் ஆண்டு முதல்

எனினும் இப்போது யாழ்.பொது நூலகத்தைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. இது குறித்து யாழ்.ஆயர் மேதகு சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் அவர்களுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்.பொது நூலகம் திறந்து விடப்படவேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் பொது நூலகத்தின் புனரமைப்பு முழுமை பெற்று விட்டமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பொது நூலகத்தைப் முழுமையாகப் புனரமைக்காமல் அதனைத் திறந்து விட வேண்டாம் என்ற பல்கலைக்கழக மாணவரின் கோரிக்கைக்கு ஒரு தெளிவான பதிலை முன்வைத்த பின்னரே, அதனைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும். இல்லையேல் மாணவர்கள் முன்வைத்த கோரிக்கை-பின்னர் நடந்து முடிந்த முடிபுகள் அர்த்தமற்றவையாகி விடும்.

இவை ஒருபுறம் இருக்க, யாழ் பொது நூலகத்தை திறந்து வைக்குமாறு மாநகர ஆணையாளரிடம் விடப்படும் கோரிக்கைகளைப் பார்க்கும் போது ஆணையாளரே நூலகம் திறக்கப்படுவதை தடுப்பது போன்ற மாயைத் தோற்றம் உருவாக்கப்படுகிறது. இவை தவிர்க்கப்பட வேண்டும் யாழ்ப்பாணத்து புத்திஜீவிகள், மதகுருமார்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களைமாற்றுவதை விடுத்து பொது நூலகத்தை முழுமையாக புனரமைப்பதற்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

யாழ்.நூலகத்தை திறப்பதற்கான அனுமதியை, யாழ். மாநகர ஆணையாளருக்கு வழங்கக் கூடிய வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுவே தேவையானதாகும்.

செவ்வாய்க் கிழமை முதல் இராமேஸ்வரம் பாம்பன் பாலச் செயற்பாடுகளை ஸ்தம்பிதம் அடையச் செய்யும் வகையில் போராட்டம் நடத்தப் படும் என தமிழ் நாடு, புதுவை மீனவர்கள் கூட்டமைப்பு மத்திய அரசை எச்சரித்துள்ளது.

சுமார் 68 இந்திய விசைப்படகுகளும்,11 நாட்டுப் படகுகளும், 89 மீனவர்களும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர்.

தமிழக மீனவர்களையும், மீன் பிடிப்படகுகளையும் அடிக்கடி இலங்கைக் கடற்படையினரும், மீனவர்களும் பிடித்து வரு கின்றனர்.

எனவே இப்பிரசசினையை தீர்த்து வைப்பதற்கு மத்திய அரசு விரைந்து செயற்படவேண்டும் என தமிழ்நாடு புதுவை மீனவர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் போஸ்

ஓம்

**திசைரி தியானம்**

## விவேகச் சிந்தனைகள்

வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையும் பெரும் மனவுறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். விடா முயற்சி பெற்றவன் 'சமுத்திரத்தையே குடித்துவிடுவேன்.' எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும் என்று சொல்கிறான். அத்தகைய ஆற்றலை, அத்தகையை மன உறுதியை நீ பெற்றிரு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.

அறியாமை மிக்க உயிரற்ற புல் பூண்டு வாழ்க்கையைக் காட்டிலும் மரணமே மேலானது. தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விடப் போர்க்களத்தில் மாய்வதே மேல்.

**சுவாமி விவேகானந்தர்**

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் 45 வகையான தொழில்நிறுவனங்களுக்கு 2004ஆம் ஆண்டு முதல் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சுற்றாடலை மாசுபடுத்தும் முக்கிய தொழில் சார் நிறுவனங்களான வாகனத் திருத்தகம், ஒட்டு வேலைத் தொழிலகம், கோழிப்பண்ணை, அரைக்கும் ஆலைகள், அரிசி ஆலைகள், அச்சகம், விடுதிகள், கடைச்சல் இயந்திர வேலைத்தளம், உணவகங்கள் போன்றவற்றின உரிமையாளர்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் இயங்கும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்படி உரிமத்தினை தவறாது பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை பெற்றுக் கொள்ளத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிகள் யாழ்ப்பாணத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருப்பதுடன் அதன் அலுவலகம் யாழ்.செயலகத்தில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

## அபிவிருத்தி மாநாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பறை மாவட்டங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முக்கிய மாநாடு ஒன்று கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

தேனகம் விடுதியில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இவ்வாண்டில், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள கல்வி , வீதிப் போக்குவரவு, குடிநீர் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. (உ-4)

# முஸ்லிம்களது உரிமைகளை உள்ளடக்கிய வகையில் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்க வேண்டும்

## ஏ.எச்.எம்.பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டில் வாழும் சகல முஸ்லிம் மக்களினதும் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் வகையிலேயே முஸ்லிம்களின் உரிமைகளுக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; இஸ்லாமிய மதத் தலைவர்களினதும், புத்திஜீவிகளினதும் ஆலோசனையைக் கேட்டறிந்து விசேட நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றின் மூலமே ஆலோசனைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக ஏனைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களினுடனும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 21ம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் மக்களுக்காக ஆலோசனைத் திட்டம் ஒன்று வரையப்படுமாயின் அத்திட்டத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களை மட்டும் வரையறைக்கு உட்படுத்தியதாக இருக்கக் கூடாது.

மாறாக இத் திட்டத்தில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவரினது நலன்களையும் அபிலாஷைகளையும் கருத்தில் கொண்டே திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

முஸ்லிம் சமூகத்திற்காக தயாரிக்கப்படும் திட்டம் ஒரு கட்சியினாலோ அல்லது ஒரு நபரினாலோ தயாரிக்கப்படுமாயின் அதன் மூலம் சிறந்த பலனை பெற முடியாது என்பதுடன் அது முஸ்லிம் மக்களின் நலன்களையும் பாதிக்கும்.

இதனால் உலகளாவிய ரீதியில் உள்ள புத்திஜீவிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட தமது இடைக்கால நிர்வாக திட்டவரைபினை தயாரிப்பதற்காக உலகளாவிய ரீதியில் சமஷ்டி ஆட்சி முறை நிலவும் நாடுகளுக்குச் சென்று விளக்கங்களைப் பெற்ற பின்னரே தமது தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்தனர் என்றார்.

(தி-60)

# போதைப் பொருள் வியாபாரி துப்பாக்கிச் சூட்டுக்குப்பலி

(கொழும்பு)

கொழும்பில் பாலத்துறைப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிறுமி உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர் பிரபல போதைப்பொருள் வியாபாரி கே.ரி. பந்துல என்று தெரிவிக்கப்படுகிறது.

பாலத்துறை 391ஆம் இலக்கத் தோட்டத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கே.ரி.பந்துல என்ற நபரை குறிவைத்து இத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாகவும் இச் சம்பவத்தின் போது அருகில் சென்று கொண்டிருந்த சிறுமியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம)

# தென்மராட்சி மீள்குடியமர்வு குறித்து இன்று கோயிலாக்கண்டியில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான மிக முக்கிய கூட்டம் ஒன்று இன்று மு.ப 10 மணிக்கு கோயிலாக்கண்டி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தளபதி சுசில் சந்திரபால தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் பங்கு கொண்டு தமது பிரச்சினைகள் குறித்து விளக்குமாறு இப் பகுதிகளில் மீளக்குடியமர முடியாதுள்ள சுமார் 650 குடும்பங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் குறித்த அறிவிப்பு நேற்று தென்மராட்சி படைத் தளபதியினால் சாவகச்சேரி பிரதேச செயலரூடாக விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதிகளில் மீளக்குடியமர்வதற்கான அனுமதியினை 31.01.2004 இற்கு முன்பாக வழங்காது விட்டால் 04.02.2004 தொடக்கம் சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகக் குறிப்பிட்டு மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக நிலையத்தின் தலைவர் செ.ஆனந்தராஜன் கடந்த 6ஆம் திகதியன்று பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் நாம் மாற்று வழிகளைக் கையாள்வோம்

## வர்த்தகப் பேரவைத் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்காது விட்டால் இம் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் மாற்று வழிகளை கடைப்பிடிக்க நேரிடும் என்று, ஒருங்கிணைந்த வர்த்தகப் பேரவை அறிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த வர்த்தகப் பேரவையின் கூட்டம் ஒன்றில் மேற்கண்டவாறு தீர்மானம் எடுத்துள்ளதாக அதன் தலைவர் மகேந்திரா அமரசிறி தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் மதத்தலைவர்கள், இலங்கை தொழில்சார் நிபுணர் சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த வர்த்தகப் பேரவையின் தலைவர் கருத்து வெளியிடுகையில்,

அரசியல் வாதிகளால் இந்த நாட்டை வழிநடத்த முடியாவிட்டால் அதனைச் செய்யக் கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும். தமது சொந்த விருப்பத்திற்கு ஏற்றவாறு ஒருவரும் இந்த நாட்டை வைத்திருக்க முடியாதென்றும் கூறினார்.

(ம)

# பொலிஸாருக்குச் சம்பள உயர்வு இந்திரா டிசில்வா உறுதி

(கொழும்பு)

யுத்தத்தைவிட மக்களின் மனங்களை வென்றெடுப்பதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிற்கு விஷேட அதிரடிப் படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட வரவேற்பு வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் தயாராக இருக்க வேண்டும்.

நாட்டின் தற்போதைய நிலைமையின்படி இது எதிர்காலத்தில் மிகவும் முக்கியமானது.

நாட்டின் சட்டம் மற்றும் அமைதியை கடைப்பிடிப்பதுடன் பாதுகாப்பு தொடர்பாக பொலிஸார் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

வன்முறைகள் அதிகரித்து வரும் சமூகச் சூழலில் பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பு மிகவும் முக்கியமான தொன்றாக இருக்கிறது.

இதேவேளை அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வுகள் பொலிஸாருக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அங்கு அவர் உறுதியளித்தார். (தி-60)

---

### ஜனாதிபதியையும்...

தியாவின் உதவியையும் ஆதரவையும் நாடியிருக்கிறார்.

இந் நிலையில் இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டைத் தவிர்க்கவும், இந்திய ஆதிக்கத்தை ஏற்படுத்தவுமே இந்திய

---

### புலிகள்...

சமாதானச் செயற்பாடுகளில் தானாகவே ஈடுபட்டதாலேயே இச் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஜனாதிபதி நவம்பரில் அமைச்சுக்களைப் பொறுப்பேற்க முன்னரே கடந்த ஏப்பிரலில் விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகி விட்டனர். இடைக்கால தன்னாட்சி அதிகார சபைபற்றிப் பேச தயாரான அரசுடன் தான் பேசுவதென்ற தமது நிலைப்பாட்டை அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக பிரதமர் அச்சுறுத்துகிறார். பிரதமர் தான் பிரதமர் என்ற நிலையில் இருந்தே சமாதானப் பேச்சுக்

---

### சமாதானப்...

புதிய தொழில்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய ஆரம்பித்துள்ளோம். இவ்வகையில் வடக்கின் வேலை வழங்குநர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவைதவிர நாட்டில் உள்ள ஏழு வர்த்தக வணிகர் கழகங்களுக்குச் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தின் மூலம் பாதிப்படைந்த சிறுவர், பெண்களின் புனர்வாழ்வுக்கென யுனிசெவ் நிறுவனமூடாக நாம் முக்கியமான பங்களிப்புக்களை வழங்கிவருகின்றோம்.

கிளிநொச்சிக்குக் கடந்த திங்கள் அன்று விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்

# ஞாபகார்த்த கட்டடம் இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி பேஜ்சின் ஞாபகார்த்த கட்டடத் திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கட்டடத்தை குருநாகல் மறைமாவட்ட பேராயரும், அங்கிலிக்கன் திருச்சபைப் பாடசாலைகளின் ஆளுநர் சபைத் தலைவருமான அதிவணக்கத்திற்குரிய குமார இலங்கசிங்கா திறந்து வைக்கவுள்ளார்.

1904ம் ஆண்டு இலங்கை வந்து 27 வருடங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்த செல்வி பேஜ் அம்மையாரின் நினைவுச்சின்னமாக இக் கட்டடம் திகழ்வதாக அதிபர் திருமதி தே.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத்தினுள் பிரார்த்தனை அறை, கேட்போர்கூடம், கணனி வகுப்பறைகள் என்பன அடங்கியுள்ளன.

(ச)

# ஷெல் மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதியில் ஆர்.

இந் நிலையில் இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டைத் தவிர்க்கவும், இந்திய ஆதிக்கத்தை ஏற்படுத்தவுமே இந்திய அரசு நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சார்க் மாநாட்டில் ஜனாதிபதி இந்தியப் பிரதமருடன் நடாத்திய பேச்சுக்களின் பிரதிபலிப்பாகவே இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

இவ்வாரம் ஜனாதிபதியையும் பிரதமரையும் தனித்தனியாகச் சந்திக்கவிருக்கும் இந்தியக் குழு, அரசியல் நெருக்கடிக்கான தீர்வு குறித்து இரு தலைவர்களிடமும் விரிவாகப் பேசி, ஒரு பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் என்றும் நம்பப்படுகின்றது. (இ)

## நால்வர்..

இடையிலான பாதுகாப்பு ரீதியான உறவை வலுப்படுத்துதல் மற்றும் இருநாடுகளுக்கிடையில் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவது குறித்து ஆராய்தல் ஆகிய விடயங்கள் பற்றி இக் குழுவினர், இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்டக் குழுவுடன் ஆராயவுள்ளனர்.

இதேவேளை சார்க் மாநாட்டிற்கு சென்றிருந்தவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து ஆராய்ந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக பிரதமர் அச்சுறுத்துகிறார். பிரதமர் தான் பிரதமர் என்ற நிலையில் இருந்தே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். பாதுகாப்பு அமைச்சர் என்ற நிலையில் இருந்து அல்ல. அவரால் ஏன் இப்பொழுது சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லமுடியவில்லை என்று விளங்கவில்லை.

எவ்வாறாயினும் பாதுகாப்பு அமைச்சு இல்லாமல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி வடக்குக் கிழக்கில் செயற்படுவதற்கான சூழ்நிலையைப் புலிகளுக்கு வழங்க முடியாத நிலை ஒருவேளை இருக்கலாமென தேச பற்று இயக்கம் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## தேர்தலை...

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தக் கூடிய சூழல் உள்ளதா என்பது குறித்து ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்றபோது வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தும் சூழ்நிலை இல்லையென அதில் கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எவ்வாறாயினும் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது பற்றிய தீர்மானத்தை இன்னும் சில தினங்களுக்குள் தேர்தல் ஆணையாளர் வெளியிடுவாரென தேர்தல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.(உ-61,10)

களிப்புக்களை வழங்கிவருகின்றோம்.

கிளிநொச்சிக்குக் கடந்த திங்கள் அன்று விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பல முக்கிய விடங்கள் பற்றிப் பேசியுள்ளோம்.

முக்கியமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மறுவாழ்வு விடயத்தில் நாம் கூடிய கவனம் கொண்டுள்ளோம். இது இவ்விதம் இருக்க இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் சம்பாசனை செய்துள்ளோம். இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கென சுவீடன், டோக்கியோ மாநாட்டில் 4 மில்லியன் டொலரை வழங்க உறுதியளித்துள்ளது. ஆயினும் துரதிஷ்டவசமாக அது இன்னமும் அமுலுக்கு வரவில்லை என்றும் கிறிஸ்ரினா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட செயலகத்தில் சுவீடன் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களான 'கிறிஸ்ரீனா ஹஸ்மாக் பெகொஸ்ஸன், இங்கார்றெனே ஆகியோர் சுவீடன் தூதுவராலயப் பிரதிநிதிகள் சகிதம் அரச செயலகத்தின் திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம் ஆகியோரைச் சந்தித்துக் குடாநாட்டு நிலைமைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டனர். (இ-16)

மான அதிவணக்கத்திற்குரிய குமார இலங்கசிங்கா திறந்து வைக்கவுள்ளார்.

1904ம் ஆண்டு இலங்கை வந்து

## உயர்தர...

களை கொண்டிருக்க இடமளிக்கப்படலாம்.அத்துடன் உயர் தர பாடங்கள் 41இலிருந்து 31ஆக குறைக்கப்பட வேண்டுமென்றும் பொதுவான வினாப்பத்திரம் கட்டாயமான தாக இருக்க வேண்டுமென்றும் ஆணைக்குழு தனது சிபார்சில் தெரிவித்துள்ளது.

அத்துடன் உயர்தர மாணவர்களுக்கு செய்முறைப் பரீட்சையைக் கட்டாயமாக வைத்திருக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்துள்ளது.(ந-6)

யுள்ளன. (ச)

## ஷெல் மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதியில் ஆர்.பி.ஜி. ஷெல் ஒன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

நேற்று கண்டிவீதி செம்மணியில் இராணுவக் காவலரண் ஒன்றிற்கு அண்மையில் வெடிக்கக் கூடிய நிலையில் காணப்பட்ட ஆர்.பி.ஜி. ஷெல்லே ஹலோ ரெஸ்ட் மிதிவெடி அகற்றும் குழுவினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதனால் கண்டிவீதிப் போக்குவரத்து அரைமணிநேரம் தடைப்பட்டிருந்தது. (ச-16)


மிக விரைவில்
உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்
விவாத அரங்கு
கருத்துச் சங்கமம்
மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்
✶ஆசிரியர்களா?
✶மாணவர்களா?
✶பெற்றோர்களா?
உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.